பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு

# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 31 செவ்வாய்க்கிழமை (15 - 08 - 2000) VALAMPURI ஒலி: 239

★ யாழ். தேர்தல்களம் ✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻✻

# நான்கு முனைப்போட்டியில் தமிழ்க் கட்சித் தலைவர்கள்!

## அபேட்சகர் தெரிவில் மும்முரம்

(கொழும்பிலிருந்துநமதுநிருபர்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ்க் கட்சித் தலைவர்கள் அனைவரும் யாழ் மாவட்டத் தேர்தல் களத்தில் குதிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதற்கு முன்னோடியாக சகலதமிழ்க் கட்சிகளின் தலைவர்களும், இவ்வார இறுதியில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரவுள்ளதாகவும், அவர்கள் தேர்தல் முடியும்வரை யாழ்ப்பாணத்திலேயே முகாமிட்டிருப்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் தமிழ்க் கட்சித் தலைவர்கள் தேர்தல் களத்தில் குதிக்கவிருப்பதால், இவ்வார இறுதியில் தமிழ்க் கட்சித் தலைவர்கள் அனைவரும் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

ஈ.பி.டி.பி அமைப்பின் செயலாளர் நாயகமும், யாழ் மாவட்ட எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா தற்போது யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து தேர்தல் பிரசார வேலைகளை ஆரம்பித்துள்ளார் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

(8ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.மாவட்ட கூட்டணி வேட்பாளர் பட்டியல் தயார் நிலையில்!

(கொழும்பு

எதிர்வரும் பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் போட்டியிடுவது சம்பந்தமாக ஆராய்ந்து பட்டியலை இறுதியாகத் தயாரிப்பதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் 17 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளதாக கொழும்பில் உள்ள கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(8ம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல்சேவை இன்று நடைபெறும்

கடந்த 12ந் திகதி கப்பல் ... கப்பல் பயணச்சீட்டுடன்

## பிரதமர் விக்கிரமநாயக்காவுக்கு கொலை அச்சுறுத்தலாம்

### விசேட பாதுகாப்பு ஏற்பாடு

புதியபிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புஅமைச்சுக் ... சாவடிகள் காப்பரண்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## ஈச்சமோட்டையில் சுற்றிவளைப்பு

[சுண்டுக்குளி]

ஈச்சமோட்டை பகுதி நேற்று படையினரால் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தப்பட்டது.

ஈச்சமோட்டை வீதி விதானையார் வீதி, பால்குளம் லேன், ஈச்சமோட்டை பீச் றோட், ஆகிய பகுதிகளிலேயே தேடுதல் நடத்தப்பட்டது.

காலை 6.00மணி தொடக்கம் 8.00மணி வரை இத்தேடுதல் நடத்தப்பட்டதாயினும் எவரும் கைது செய்யப்பட்டதாக தகவல் இல்லை. (க)

## தீப்பந்த ஊர்வலம்

[வவுனியா]

முல்லைத்தீவு வற்றாப்பளையில் நேற்று தீப்பந்த ஊர்வலம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கபபடுகிறது

இத்தீப்பந்த ஊர்வலத்தில் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டதாகவும். போர்க்கோஷங்கள் எழுப்பப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [ந—7[

## 10 எம். பிக்களும் நாடு திரும்பினர்

[கொழும்பு]

புதிய அரசியல் அமைப்பு சீர்திருத்தத்திற்கு ஆதரவுகொடுப்பார்கள் என்ற அச்சத்தின்காரணமாக ஐக்கியதேசிய கட்சியினரால் சிங்கப்பூரிற்குஅனுப்பி வைக்கப் பட்டிருந்த பத்து ஐ.தே. கட்சி எம்பிக்களும நேற்று நாடு திரும்பி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. [வ—7[

## நாளை கூட்டம்

(புலோலி)

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன் கிழமை காலை 9மணிக்கு புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

சாவகச்சேரிப் பகுதியில் கடந்த 10ம் திகதி இராணுவத்தினர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மோதலின்போது, லெப். தர்மிலன் (அரியரத்தினம் அன்றன்ரமன்ராஜ்) திருமலை, குவேனி (வீரையா லக்ஷ்மி) வவுனியா, 2ம். லெப். அபிராமி (குணரத்தினம் ஜெயச்சித்திரா) யாழ்ப்பாணம் ஆகியோர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ந-7)

## கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

மக்கள்வங்கியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தெரிவு செய்யப்பட்டுநேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் ஒரு தொகுதியினர் இன்று கொழும்பு பயணமாகின்றனர். (க- 03)

களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன் கிழமை காலை 9மணிக்கு புதிய உயர் கல்லூரியில் நடை பெறவுள்ளது.

இதில் சகல பகுதி நேரஆங்கில ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந-7-52)

## தீக் காயங்களுடன் அனுமதி

(யாழ்ப்பாணம்)

ஒரு பிள்ளைக்கு தாயான 20 வயது நிரம்பிய இளம் பெண் ஒருவர் கடும் தீக்காயங்களுக்கு ஆளாகிய நிலையில் யாழ் போதனா வைத்திய

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று நடைபெறும்

கடந்த 12ந் தி.தி கப்பல் பயணச்சீட்டு பெற்றவர்களை இன்று காலை 8மணிக்கு பயண ஏற்பாடுளுடன் யாழ் சிவில் நிர்வாகக கரியாலயத்திற்கு வருகை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

கப்பல் பயணச்சீட்டுடன் பயண அனுமதிப்பத்திரமும் இருந்தால் மட்டுமே கப்பலில் பயணிக்க அனுமதிக்கப் படுவார்கள் எனவும் யாழ். சிவில் நிர்வாக காரியாலயம் அறிவித்துள்ளது. [ந]

## சிங்கள இனவாதக் கட்சிகள் 17 ஆம் திகதி ஆர்ப்பாட்ட பேரணி

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சியும் மற்றும் சிங்கள இனவாத அமைப்புக்களும் ஒன்று சேர்ந்து 17ம் திகதி வியாழக்கிழமை அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

புதியபிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்காவுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புஅமைச்சுக்குகிடைத்த தகவலையடுத்து அவரின்பாதுகாப்புநேற்று அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதமரின் வாசஸ் தலத்தின் முன்னால் சோதனைச் சாவடிகள் காப்பரண்கள் அமைக்கப்பட்டு வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவைவிட புதிய பிரதமருக்கு அச்சுறுத்தல் அதிகம் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது [ந-7-108]

## பிரதமர் ரட்ணசிறியின் கூற்றுக்கு தமிழ்க் கட்சிகள் கண்டனம்

[கொழும்பு]

பௌத்த மகாசங்கத்தினரின் ஆலோசனையை பெற்றுத்தான் அரசியல்அமைப்புச் சீர்திருத்தம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்ற பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவின் கூற்றுக்கு தமிழ்க் கட்சிகள் பலத்த ஆட்சேபமும் கண்டனமும் வெளியிட்டுள்ளனர்.

பிரதமரின் கருத்துதொடர்பாக புளொட் அமைப்பின் தலைவர் சித்தார்த்தன் கருத்து வெளியிடுகையில் ஜனாதிபதியின் கருத்துக்கு பிரதமரின் கருத்து முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது இது பாரதூரமான விளைவுகளை

(8 ஆம் பக்கம் பார்க்க)

# குமார் பொன்னம்பலத்தின் மறைவு

## ஜனநாயகத்துக்கு பேரிழப்பு

### பேராசிரியர் கா. சிவத்தம்பி

[கொழும்பு]

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் மரணத்திற்குப்பின் தமிழ் மக்களது பொது வாழ்வின் எந்த அம்சமும் வெளிவந்ததை நாம் காணமுடியவில்லை புது விடயங்களை பட்ட வர்த்தனமாக பேசக்கூடிய நிலமையை இழந்து நிற்கிறோம் என்று பேராசிரியர் கா. சிவத்தம்பி கூறியுள்ளார்.

கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில் மறைந்த அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் நினைவு அஞ்சலி நினைவு மலர் வெளியீட்டுக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி தொடர்ந்து உரையாற்றுகையில்,

குமார் பொன்னம்பலம்

(8 ஆம் பக்கம் பார்க்க

## பொ. ஜன. ஐ முன்னணிப் பட்டியலில் பெருமாள் போட்டியிடுவார்?

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும்,ஈ. பி. ஆர். எல். எவ்.இன் தலைவருமான அ. வரதராஜப் பெருமாள் எதிர்வரும் பொதுத் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பட்டியலில் போட்டியிடலாம் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (8ம் பக்கம்பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறைப் படிப்பகம்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### சீமெந்து கூரை ஓடுகள்

லண்டன் Parry நிறுவனத்தால் தரநிர்ணயம் செய்யப்பட்ட சீமெந்து கூரை ஓடுகள், முகட்டோடுகள் விற்பனைக்குண்டு. அத்துடன்பல அளவுப் பிரமாணங்களில் இயந்திரங்களால் தயாரிக்கப்படும் கொங்கிறீட் கற்களும் விற்பனைக்குண்டு.

தொழிற்சாலையில் நேரடியாக பொருட்களை கொள்வனவு செய்பவர்களுக்கு விசேட கழிவுகளும் இலவச போக்குவரத்து வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

லோகேஸ் கூரை ஓட்டுத் தொழிற்சாலை.
பரராசசேகரப் பிள்ளையார் கோவிலடி, இணுவில். (1611)

## இராசி பலன்

15-8-2000
(ஆடி 31செவ்வாய்)
பூரணைமு.ப. 10.51 வரை
அவிட்டம் பி.இ 2.58 வரை
இராகுகாலம் 3.05-4.35 வரை
சுபநேரம்-10.351-2.05 வரை

**மேடம்**
பெருள்வரவு, குடும்ப மகிழ்ச்சி, புதிய சூழ்நிலை.

**இடபம்**
அறிஞர் சந்திப்பு, முயற்சி பலிதம் பிரயாணம்.

**மிதுனம்**
மனச்சலனம், உறவினர் வெறுப்பு, பணச் செலவு.

**கடகம்**
வாக்குக் கலகம், உடல் வியாதி, வீண்செலவு.

**சிங்கம்**
விருந்துண்ணல், பொருள் வரவு, அறிஞர் சந்திப்பு.

### நல்லூர் மகோற்சவ காலம்

# தொண்டர்கள் பொது நீதியுடன் பணிசெய்தால் முரண்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்

நல்லூர்க் கந்தனின் மஹோற்சவம் ஆரம்பமாகிவிட்டால் சைவத் தமிழர் மத்தியில் ஆனந்தம் பெருகும் அன்பு பெருகும். எங்கும் தூய்மையும், பக்தி பரவசமும் காட்சி தரும், விரதங்களும் அனுட்டானங்களும் காண்போர் மனதில் இறையுணர்வை உண்டுபண்ணும். அத்தகைய பெருமை நல்லூரானின் மஹோற்சவத்திற்குண்டு.

ஆனால் இன்று அந்நிலை மாறி-மேலையேறி விட்டது. ஞானிகளும், யோகிகளும் நடமாடிய நல்லூர் மண்ணில் கோஷ்டி மோதல்களும், குழப்பங்களும், கூச்சல்களும் மலிந்து விட்டது. இளைஞர்களின் அட்டகாசம் தெய்வீகத்தின் சிறப்பை மழுங்கடித்து விடுகிறது.

இத்தகைய நிலைகள் இளஞ்சந்ததியின் ஆரோக்கிய மற்ற எதிர் காலத்தையே சுட்டி நிற்கின்றது.

ஆரம்பத்திலேயே இதற்கொரு முடிவு கட்டா விட்டால் நிலைமை மோசமாகி விடும் என்பதில் ஐயமில்லை.

### இளைஞர்கள் தொண்டர்கள் கருத்து முரண்பாடு

கடந்த சில தினங்களுக்கு முன் அங்கப் பிரதட்சணம் செய்ய வந்த இளைஞர்களுக்கும், வீதித் தடைக் கடமையிலிருந்த தொண்டர்களுக்குமிடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டது. இதுபற்றி வலம்புரியும் செய்தி வெளியிட்டிருந்தது.

இச் செய்தி தொடர்பாக சம்பந்தப்பட்ட இளைஞர்கள் நேற்று வலம்புரிக் காரியாலயத்திற்கு வந்து தமது தரப்பிலுள்ள நியாயங்களை எடுத்துக் கூறினர். நியாயம் எந்தப்பக்கம் இருக்கிறதோ அதனை ஏற்றுக் கொள்வது பத்திரிகைத் தர்மம் அதில் இருவேறு கருத்திற்கு இடமில்லை.

அதேவேளையில், குறித்த இளைஞர்களும் ஆலயத் தொண்டர்கள் என்பது ஆலயப்பணியில் தம்மை ஈடுபடுத்தியவர்கள் என்பதுடன் அவர்கள் தெரிவித்த கருத்திலும் நியாயம் இருக்கவே செய்துள்ளது.

சம்பவதினம் தொண்டர்கள் கடமைக்கு வரமுன்பதாகவே அங்கப் பிரதட்சணம் செய்யும் அடியார் கூட்டம் ஆலயத்தினுள் சென்று விட்டது. துவிச்சக்கர வண்டிகளும், மோட்டார் சைக்கிள்களும் ஆலய வளாகத்தினுள் நுழைவதற்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை. இந்நிலையில் காலம் தாழ்த்தி வந்த தொண்டர்கள் சைக்கிள் காற்றைதிறந்துவிட்டனர்

அதுமட்டுமின்றி குறித்த இளைஞர் குழுவுடன் முரண்பட்ட தொண்டர் சீருடையுடன் தனது கடமையை ஆற்றவில்லை என்றும் குறிப்பிட்ட தனியார் சைக்கிள் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட வேண்டிய துவிச் சக்கர வண்டிகளின் காற்றை மட்டுமே திறந்துவிட்டுள்ளார் என்றும் இளைஞர் குழு குற்றஞ் சாட்டியுள்ளது.

எப்படியாயினும் தற்போது முரண்பாடுகள் தணிந்துசுமுக நிலை ஏற்பட்டுள்ளமை மனதிற்கு ஆறுதலை அளித்துள்ள போதிலும் இப்பிரச்சினைகள் தொடர் கதையாக மாறாதிருக்க தொண்டர்களும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது கட்டாயமாகும்.

### தொண்டர் பணி

ஆலயப்பணியில் ஈடுபடும் தொண்டர்கள் முதற்கண் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம் என்பதை மறந்து விடக் கூடாது. தொண்டர்கள் என்பதற்காக எப்படியும்-எவ்வாறும்நடந்து கொள்ளலாம்என்று நினைப்பது தவறு. பொறுமையும், பண்பான சொற் பிரயோகமும், நிதானமும், தொண்டர்க்குத் தேவையான தகுதிகளாகும்.

தொண்டர்களும் ஏனைய அமைப்புகளும் பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்தினால்நல்லூரில் ஏற்படக் கூடிய தேவையற்ற சிக்கல்களைத் தவிர்க்க முடியும்.

★ அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தரமுன்பே வீதித் தடைகளில் தொண்டர்கள் கடமையில் ஈடுபட வேண்டும்.

★ பணியில் ஈடுபட்டிருக்கும் தொண்டர்கள் எல்லோரையும் ஒரேகண் கொண்டு நோக்குதல் மிக அவசியமாகும். தமக்குத் தெரிந்தவர்களை வாகனத்தில் செல்ல அனுமதிப்பதும்மற்றவர்களைத்தடுப்பதுமாக இருந்தால் பொதுவான நடைமுறையைப் பின்பற்ற முடியாது போகும்.

★ சிக்கல்கள் ஏற்படுகின்ற போது அதனைப் பொறுப்பானவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து சுமுகமாகத்தீர்த்து வைக்கநடவடிக்கைஎடுத்தல்.

போன்ற விடயங்களைக் கடைப்பிடிப்பது பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையும்.

இதேவேளை ஆலயச் சூழலில் அமைதியைப் பேணும் முயற்சியில் ஈடுபடும் யாழ். மாநகர சபை ஊழியர்கள் மற்றும் அரச திணைக்கள ஊழியர்களும் அடியார்களுக்கு விதிக்கப்பட்ட விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

அடியார் கூட்டத்திலிருந்து தம்மை வேறுபடுத்திக் காட்டும் செயலாக சைக்கிள் -மோட்டார் சைக்கிள்களில் ஓடித்திரிவதும் தவிர்க்கப்பட வேண்டும். உரியவர்கள் முதலில் முன்மாதிரியாக நடந்தால் மட்டுமே பொதுமக்கள் அதனைப்பின் பற்றுவார்கள் அப்போது நல்லூரானின் மகோற்சவம்சுமுகமாக-பக்திபூர்வமாக நடந்தேறும் என்பதுதிண்ணம்.

## ★விதுரன்★

## குருக்ஷேத்திரம்

(யாழ்ப்பாணம்)

# சமுர்த்தி நியமனங்களுக்கான நேர்முகப்பரீட்சைநாளை நடக்கும்

## அழைக்கப்பட்டோர் பெயர் விபரம்

சமுர்த்தி ஊக்குவிப்பாளர் சமுர்த்தி வங்கியாளர் சமுர்த்தி யூனியன் ஆகிய பதவி நிலைகளுக்கான நேர்முகப்பரீட்சை நாளை 16ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவோர் தாம் வதியும் உதவி அரச அதிபர் பணிமனையில் பின்வரும் ஆவணங்களுடன் சமுகம் தருமாறு கோரப்பட்டுள்ளது.

இராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்டு உதவி அரச

ஜே-152 பிரதான வீதி முத்துக்கடை மாதகல்
டெய்சிபெய்சி அருளானந்தம் ஜே-156 தபாற்கந்தோர் வீதி இளவாலை
லோகநாதன் ஞானவேல் ஜே-139, 32 அடிகார் செல்வ வழுத்து வீதி மானிப்பாய்
வேலாயுதம் லோகேஸ்வரி ஜே-43விளானை, காரைநகர்
விஜயபாஸ்கர் நிசாந்தினி ஜே-50 ஊர்காவற்றுறை
இரவீந்திரன் இம்மாகுலேட் ஜே-51 மண்குழி வீதி, ஊர்காவற்றுறை
நாகநாதி சரஸ்வதி ஜே-52 காரம்பன் தெற்கு,

### வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு

### சமுர்த்தி ஊக்குவிப்பாளர்

வெற்றிடம்

பேதுருறு பீனாமேரி ஜே-07, 3ம் வட்டாரம், மண்டைதீவு
உமாபதி சசிதரா ஜே 09, 2ம் வட்டாரம், மண்டைதீவு.
தேவசகாயம் தவநாயகம் ஜே-13, 1ம் வட்டாரம், வேலணை கிழக்கு
கந்தையா பிரேமலாதேவி ஜே-18, 6ம் வட்டாரம்,

**சிங்கம்**

விருந்துண்ணல், பொருள் வரவு, அறிஞர் சந்திப்பு;

**கன்னி**

சுப செய்தி, தொழில் மேன்மை, பணவரவு;

**துலாம்**

உணர்ச்சி வசப்படல், வீண் செலவு, அபகீர்த்தி;

**விருச்சிகம்**

நம்பிக்கைத் துரோகம், காரியத்தடை, தடுமாற்றம்.

**தனு**

பணவரவு, குடும்ப சுகம், சிறு வியாதி;

**மகரம்**

வாக்கு வாதம், பொருட் செலவு, மனச்சங்கடம்;

**கும்பம்**

உடல் நல சுகம், காரிய வெற்றி, பெரியோர் மதிப்பு;

**மீனம்**

வழிப் பயம், வீண்பகை, திட்டம் தோல்வி;

(பழைய நேரப்படி கணிக்கப்பட்டது)

வளவன்

பணிமனையில் பின்வரும் ஆவணங்களுடன் சமுகம் தருமாறு கோரப்பட்டுள்ளது.

கிராம சேவையாளரால் உறுதிப்படுத்தப்பட்டு உதவி அரச அதிபரால் மேல் ஒப்பமிட்ட நற்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், (சமுர்த்தி ஊக்குவிப்பாளர்க்கு மட்டும்] அடையாள அட்டை, கல்விச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், வதிவிடச் சான்றிதழ்

மேற்படி நேர்முகப் பரீட்சைக்கு தோற்றவேண்டியோர் பெயர் விபரங்கள் பிரதேச செயலர் ரீதியாக தரப்படுகின்றது

## சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர்பிரிவு

சமுர்த்தி ஊக்குவிப்பாளர் வெற்றிடம்

மேரி ஸ்ரெலா பீற்றர் ஜே-135 நவாலி கிழக்கு

தம்பிரமணம் சுபாசினி ஜே-141 சண்டிலிப்பாய் வடக்கு

யோகராஜா கோமலாதேவி ஜே-143 ஐயனார் வீதி சண்டிலிப்பாய்

யோகேஸ்வரன் யோகதர்சினி ஜே-144 மாகியப்பிட்டி

இயாகராசா பசலமுரளி ஜே-145 வட லியடைப்பு

வில்சன் வியந்தன் ஜே-148 இல்லாலை வடக்கு

சுப்பிரமணியம் கோமதி ஜே-150 மாதகல் கிழக்கு

அரியரத்தினம் சவரிமுத்து ஜே-156 தபாற கந்தோர் வீதி இளவாலை

லோகநாதன் ஞானவேல் ஜே-139, 32 அடிகார் செல்வமுத்து வீதி மானிப்பாய்

சமுர்த்தி வங்கியாளர்

திருவாகினி திருநாவுக்கரசு ஆனந்தா வீதி வட கிழக்கு மானிப்பாய்

யோசேப்பு ஸ்ரீபன் நிக்சன் நல்லாயன் வீதி இளவாலை

கந்தையா ஆனந்தவேல் முருகமூர்த்தி கோயில் சுதுமலை தெற்கு

சமுர்த்தி யூனியன்

நாகமுத்து யாழினி காளிகோவிலடி சண்டிலிப்பாய் மத்தி

பத்மநாதன் கங்காதேவி காஞ்சிபுரம் மாதகல்

ஜெயரட்ணம் ரஜீவன் கிறவுண் வில்லாநவாலி தெற்கு

தர்மகுலசிங்கம் றஜிதா கனகசபை வீதி மானிப்பாய்

குலசேகரம் சுகந்தினி நவாலி வடக்கு

லோகநாதன் கெங்காதரன் உடுவில் மேற்கு

## ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்பிரிவு

சமுர்த்தி ஊக்குவிப்பாளர் வெற்றிடம்

சிவப்பிரகாசம் பரமேஸ்வரி ஜே-37 8ஆம் வட்டாரம், அனலைதிவு

முருகேசு வாகினி ஜே-38 6ம் வட்டாரம், அனலை தீவு

பஞ்சாட்சரம் இராதாகிருஷ்ணன் ஜே42 மணற்பிட்டி, காரைநகர்

ஜே-50 ஊர்காவற்றுறை

இரவீந்திரன் இம்மாகுலேட் ஜே-51 மண்குழி வீதி, ஊர் காவற்றுறை

நாகநாதி சரஸ்வதி ஜே-52 கரம்பன் தெற்கு,

இரவீந்திரன் அன்ரனற் யொபிதா ஜே-53 கரம்பன் தெற்கு

கனகலிங்கம் வைகுந்தவாசம் ஜே-55 நாரந்தனை வடக்கு

நா.குகதாஸ் ஜே-56 நாரந்தனை வடக்கு

மேரி ஜோசப் அனிற் சோதிமலர் ஜே-57 நாரந்தனை வடக்கு

இ.மேரி றபேக்கா ஜே-58 நாரந்தனை

கேதீஸ்வரன் ஞானேஸ்வரன் ஜே-59 புளியங்கூடல்

ஞானப்பிரகாசம் லிகோரி ஜே-60 சின்னமடு, சரவணை

சமுர்த்தி வங்கியாளர்

ஆண்டி சிதம்பரநாதன் பொன்னம்பலம் வீதி காரை நடராசா பாரதி [நகர் மந்திபுலம், காரைநகர்

சமுர்த்தி யூனியன்

ஜெயந்தன் சார்மிலா சுருவில்வீதி, ஊர்காவற்றுறை

சிவகுருநாதன் சிவனேஸ்வரிற பொன்னாவளை, களபூமி

வீரபாகு கலைமகன் 5ம்வட்டாரம், அனலைதீவு

கோபாலபிள்ளை ஜெகதீஸ் குமார் நாரந்தனை கிழக்கு,

விக்னேஸ்வரன்புஸ்பராஜி தம்பாட்டி

நவலிங்கம் வித்தியா கரம்பன் மேற்கு,

தேவசகாயம் தவநாயகம் ஜே-13, 1ம் வட்டாரம், வேலணை கிழக்கு

கந்தையா பிரேமலாதேவி ஜே-18, 6ம் வட்டாரம், வேலணை மேற்கு

இராஜகுலசிங்கம் சுதர்சினி ஜே-19, 4ம் வட்டாரம், வேலணை

கந்தசாமி பஞ்சலிங்கம் ஜே-20 12ம், வட்டாரம், புங்குடுதீவு

அன்ரனி வேதநாயகம் ஜே-21, 2ம் வட்டாரம், சரவணை

இ. அன்பரசி ஜே-22. 7ம், வட்டாரம், புங்குடுதீவு

பத்மநாதன் பங்கயற்செல்வி ஜே-24. 12ம், வட்டாரம், புங்குடுதீவு

வைத்திலிங்கம் பகீரதன் ஜே: 25, 12ம் வட்டாரம், புங்குடுதீவு

ஓங்காரநாதன் கஜேந்திரன் ஜே-26. 12ம் வட்டாரம், புங்குடுதீவு

க. புஸ்பாஞ்சலி ஜே-27, 4ம் வட்டாரம், புங்குடுதீவு

வேணு கலாரஞ்சினி ஜே 29 4ம் வட்டாரம், புங்குடுதீவு

கந்தசாமி பிரேமினி ஜே-29, 3ம் வட்டாரம், புங்குடுதீவு

கருணானந்தசிவம் அஜந்தன் ஜே-30, 3ம் வட்டாரம், புங்குடுதீவு

இரவுப்பிள்ளை தேவதான் ஜே-31, 3ம் வட்டாரம், புங்குடுதீவு

சுபாகரன் ஜெயகலா ஜே, 31, புங்குடுதீவு

[நாளை தொடரும்]

அச்சுவேலி அரசினர்

# ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறுவோர் தொகை வெகுவாக அதிகரிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறுவோர்தொகை அண்மையில் வெகுவாக அதிகரித்துள்ளது.

இதனால் படுக்கை வசதிகள் போதாத நிலையேற்பட்டு, நோயாளரில் பலர் நிலத்தில் படுத்திருப்பதைக் காணக்கூடியதாய் உள்ளது.

அண்மையில் பெய்த மழை காரணமாக ஏற்பட்ட கால நிலை மாறுபாட்டினால், காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட பலரும் இங்கு சிகிச்சை பெறச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

இதேசமயம், காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு சிகிச்சைபெறச் செல்வோர்க்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே அங்கு பனடோல் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

# சங்கொழங்கு

## பொறுப்பு வாய்ந்த அதிகாரியின் பொறுப்பற்ற தன்மை

### க.பொ.த உயர்தரமாணவி நிர்க்கதிநிலையில்

இறைவன் விடை கொடுத்த போதும் பூசாரி விடை கொடுக்காததால், தனது எதிர்கால சுபீட்சமான கல்வி வாழ்வையே இழந்தான் ஓர் அப்பாவி மாணவி.

வடமராட்சிப் பகுதிப் பிரபல்யமான பாடசாலையான வட இந்து மகளிர் கல்லூரி மாணவி ஒருவர் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்கு ஒரு பாடமாக இந்து நாகரிக பாடத்திற்கு விண்ணப்பித்திருந்தார்.

இருப்பினும் அளவையியல் பாடத்திற்குத் தோற்றுவதற்கான அனுமதியே அவருக்கு கிடைத்திருந்தது.

இது குறித்து, பாதிக்கப்பட்ட மாணவி பாடசாலை அதிபருடாக பரீட்சை ஆணையாளர், மற்றும் கல்விப் பணிப்பாளர் ஆகியோருடன் தொடர்பு கொண்டபோது, கணணியில் ஏற்பட்ட தவறு காரணமாகவே இவ்வழு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்பட்டதுடன், மாணவி விண்ணப்பித்த பாடத்தையே பரீட்சையில் பங்கு கொள்வதற்கான அனுமதியும் வழங்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக பரீட்சைக்குத் தோற்றவுள்ள குறித்த மண்டப மேற்பார்வையாளரைச் சந்தித்து விபரம் கூறியபோது, அப்பெருமனது கொண்ட புண்ணியவான், அனுமதியட்டையில் குறிப்பிடப்பட்ட பாடத்திற்கு மாறாக தேர்வு எழுத தன்னால் அனுமதிக்க முடியாது என கண்டிப்பாகவே மறுத்துள்ளார்.

அத்துடன் குறுகிய கால இடைவெளியில் புதிய பாட பரீட்சைக்குத் தயாராகுமாறும் புத்திமதி கூறி அனுப்பினாராம்.

பொறுப்பு வாய்ந்த இவ் அதிகாரியின் பொறுப்பற்ற தனம் காரணமாக சம்பந்தப்பட்ட மாணவியின் கல்வி தொடர்பான எதிர்காலமே இருள் சூழ்ந்ததாய் மாறியுள்ளது.

நம் தமிழ் மாணவர்கள் கல்விச் செயற்பாடுகளில் எவ்வளவு தடைகளைத் தாண்டி முன்னேற வேண்டியுள்ள இக் கால கட்டத்தில், இங்குள்ள இவ்வாறான விஷமத்தனம் கொண்ட பிரகிருதிகளின் செயற்பாடு தமிழ் மாணவரின் கல்விச் செயற்பாடுகளை மேலும் பின் தள்ளி வைப்பதாகவே உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மையே.

உமா

## மலர் பறித்ததற்காக இப்படியும் ஒரு தண்டனையா?

ஈசனை மலர்களால் பூசனை புரிய வேண்டும் என்று எமக்கு கல்விக் கூடங்களிலும் பெரியோர்களாலும் உபதேசிக்கப் படுகின்றது.

ஆனால் இறைவனை அர்ச்சிக்க மலர் பறித்த குற்றத்தால் சிறுமி ஒருவர் கீறிக் காயப் படுத்தப்பட்ட சம்பவம் மனிதாபிமானமுள்ள எவர் மனத்தையும் நிச்சயம் வருத்தவே செய்யும்.

கடவுளின் பெயரையுடைய யாழ்ப்பாண பாடசாலை ஆசிரியர் (?) ஒருவர் தனது வளவினுள் நின்ற பூ மரத்தில் பூப்பறித்தார் என்று சிறுமி ஒருவரை கொழுக்கிக் கம்பியினால் குத்தி இழுத்ததனால் கால் பகுதி தசை கிழிந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் பற்றியே இங்கு குறிப்பிடுகிறோம்.

இறைவனுக்கு அர்ப்பணிப்பதற்காக மலர் பறித்தது குற்றம் ஆகுமா? அதற்கு இப்படியும் ஒரு தண்டனையா?

குற்றம் புரிந்தாலும் அணைத்துத் திருத்த வேண்டிய ஆசிரியர் தசையைக் கீறிக்கிழிப்பதா?

சம்பந்தப்பட்டவர் நன்கு சிந்திக்கட்டும்.

இ. இராஜேஸ்வரன்

## நிவாரண விநியோக இடங்கள்

(அச்சுவேலி)

''தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் இடம் பெயர்ந்து கோப்பாய்பிரதேச செயலர் பிரிவில் தங்கி இருப்பவர்கட்கான இடம்பெயர் நிவாரணம் ஆவணி மாதத்தில் இருந்து விநியோகிக்கப் படவுள்ள இடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இருபாலை தெற்கு, இருபாலை கிழக்கு, கல்வியன் காடு, கோப்பாய் தெற்கு, கோப்பாய் மத்தி, கோப்பாய் வடக்கு, உரும்பிராய்மேற்கு, உரும்பிராய் வடக்கு, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய் கிழக்கு, ஊரெழு ஆகிய பதினொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ளவர்களின் நிவாரணம் கோப்பாய் உரும்பிராய் வீதி, உரும்பிராய் என்னும் விலாசத்தில் உள்ள சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கக் கிளையினால் விநியோகிக்கப்படும்.

நீர்வேலி தெற்கு, நீர்வேலி வடக்கு, நீர்வேலி மேற்கு, அச்செழு, சிறுப்பிட்டிமேற்கு, சிறுப்பிட்டி கிழக்கு, புத்தூர் மேற்கு, புத்தூர் [illegible] வாதரவத்தை ஆகிய9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் தங்கி இருப்பவர்களின் நிவாரணம் நீர்வேலி அரசகேசரி பிள்ளையார் கோவிலடியில் உள்ள கைதடி ப.நோ.கூ. சங்கக் கிளையினால் விநியோகிக்கப்படும்.

புத்தூர் வடக்கு, நவக்கிரி, ஆவரங்கால் கிழக்கு, ஆவரங்கால் மேற்கு, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி மேற்கு, பத்தைமேனி, தம்பாலை, கதிரிப்பாய், இடைக்காடு, வளலாய் ஆகிய 11 கிராம சேவகர் பிரிவுகளில் உள்ளவர்களின் நிவாரணம் ஆவரங்காலில் உள்ள கைதடி ப.நோ.கூ. சங்கக் கிளையினால் விநியோகிக்கப்படும் என கோப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (உ-14)

## ஆசிரியர்கள் சந்திப்பு

(தென்மராட்சி)

அறவழி போராட்டக் குழுவினால் வலிகாமப் பிரதேசத்தில் நடாத்தப்பட்டுவருகின்ற அறவழி மழலைகள் கல்விப் பூங்காக்களின் ஆசிரியைகளுக்கான முக்கிய சந்திப்பு எதிர் வரும் 17ம் திகதி மயிலணி வடக்கில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இச் சந்திப்பில் சகல ஆசிரியைகளையும் தவறாது பங்கு கொள்ளும்படி குழுவின் கௌரவ செயலாளர் கேட்டுள்ளர். (செ-77)

## வணிகர் சங்கப் பொதுக்கூட்டம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் சங்கத்தின் பொதுக் கூட்டம் எதிர் வரும் 20ம் திகதி நெல்லியடியிலுள்ள கட்டை வேலி நெல்லியடி பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம் பிள்ளை இக் கூட்டத்தின் பிரதம விருந்தினராகப்பங்கு கொள்ளவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-77)

## கொழும்புபுறக்கோட்டையில் இன்று கடையடைப்பு

புறக்கோட்டை வர்த்தக சங்கத்திற்கு உட்பட்ட கடைகள் அனைத்தும் இன்று செவ்வாய்க்கிழமை பூட்டப்பட்டிருக்கும்.

கடந்த வெள்ளிக்கிழமை புறக்கோட்டை 4 ஆம் குறுக்குத்தெருப் பகுதியில் இடம் பெற்ற சம்பவம் ஒன்றில் அப்பகுதிக் கடை உரிமையாளரும், ஊழியர்களும் சுமை தூக்கும் தொழிலாளர்களால் கடுமையாகதாக்கப் பட்டமையை எதிர்த்தே இக்கடையடைப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ)

அரசாங்க எழுதுநர் மற்றும் இதரசேவைக்கான

## நேர்முகப் பரீட்சைகளை அந்தந்த மாவட்டத்திலேயே நடத்தவும்

### வவுனியா அரச அதிபர் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்க சேவையில் எழுதுவினைஞர், மற்றும் அதனோடு இணைந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு நேர்முகப்பரீட்சையை நடத்துமாறு, இணைந்த சேவைகள் பணிப்பாளரை வவுனியா அரசாங்க அதிபர் கே. கணேஷ் கோரியுள்ளார்.

நேர்முகப்பரீட்சைக்கு விண்ணப்பதாரிகள் கொழும்பு செல்லவேண்டுமாயின் வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒருவரைப் பிணை வைத்தே அனுமதி பெறவேண்டிய நிலையுள்ளதால் குறிப்பிட்ட மாவட்டங்களில் அவற்றை நடாத்துமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை மேற்படி பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை 98-99ம் ஆண்டுகளில் நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க)

## இராணுவம் மனஉறுதிதளராது போராட வேண்டும்

### பிரதமர் உரை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் இராணுவத்தினர் மனஉறுதியுடன் போராட வேண்டும். நவீன ஆயுதங்கள் இருந்தாலும், போரில் வெற்றி கொள்ளலாம் எனக் கருதக் கூடாது. அதற்கு மன உறுதியே முக்கியம்.

இவ்வாறு பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்கா கண்டியில் இடம்பெற்ற இராணுவ வைபவம் ஒன்றில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் அவர்களை வெற்றி கொள்ள ஆயுதப் படையினருக்கு தேவையான சகலவசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

கண்டிக்கு விஜயம் செய்த பிரதமர் அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்து அரசியல் அமைப்பு சீர்திருத்த மசோதாவில், பௌத்த மகாசங்கத்தினரின் திருத்தங்களும் பரிசீலிக்கப்படும்என்று தெரிவித்துள்ளார். (வ)

## பொதுத் தேர்தலின் போது வன்முறைகள் வெடிக்கலாம்

### தேர்தல் அவதானிகள் ஆருடம்

[கொழும்பு]

எதிர்வரும் பொதுத்தேர்தலின் போது தென் இலங்கையில் வன்முறைகள் வெடிக்கலாம் என தேர்தல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தேர்தல் வன்முறைகளுக்கு வழிவகுக்கும் வகையில் கம்பகா மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போது இடம்பெற்ற கைகலப்பில் 7 பேர் காயம் அடைந்த சம்பவமானது.

எதிர்காலத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்தகைய மோதல்கள் வெடிக்கலாம்என்பதை எடுத்துக்காட்டுவதாக இது அமைந்துள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## உத்தேச அரசியல் யாப்பிற்கு சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

### கணேசமூர்த்தி எம். பி அறைகூவல்

(ஏறாவூர்)

இனவாத சக்திகள் வலுப்பெற்றுள்ள இக் கால கட்டத்தில் பல்வேறு எதிர்ப்புக்களுக்கு மத்தியில் ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியல் யாப்பினை அங்கீகரிக்க சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டுமென பொது ஜன ஐக்கிய முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் சோ.கணேஷமூர்த்தி சகல அரசியல் கட்சிகளுக்கும் அறை கூவல் விடுத்தார்.

மட்டக்களப்பு நகரில் பட்டதாரிகள் மேற்கொண்ட உண்ணாவிரதத்தினை முடித்து வைத்த பின்னர் இடம் பெற்ற விஷேட வைபவத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைக் கூறினார்.

கணேஷமூர்த்தி எம். பி. மேலும் பேசுகையில் தீர்வுத் திட்டம் தயாரிப்பது தொடர்பாக அரசாங்கம் அனைத்துக் கட்சிகளினதும் ஆலோசனைகளைப் பெற்றது. இதன் போது இணக்கப்பாட்டினையடுத்து சட்ட நகல் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டது என்றார். (க-108)

## இரண்டாம் தவணை விடுமுறை

(வண்ணார்பண்ணை)

யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவன பகல்நேர மாணவர்களுக்கு எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும், மாலை நேர மாணவர்களுக்கு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் இரண்டாம் தவணை விடுமுறை வழங்கப்படுகின்றது.

மீண்டும் விரிவுரைகள் பகல் நேர மாணவர்களுக்கு எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமையும், மாலை நேர மாணவர்களுக்கு அடுத்த மாதம் 2 ஆம் திகதி சனிக்கிழமையும் ஆரம்பமாகவுள்ளது. (செ-109)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நிரவாந்துவிறப் படியுகம்

மட்டக்களப்பு சித்தாண்டி

# படுகொலைச சம்பவம் குறித்து நடவடிக்கைமேற்கொள்ள வேண்டும்

## ஜோசப் எம்.பி. ஜனாதிபதிக்கு மகஜர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சித்தாண்டி இராமத்தைச் சேர்ந்த 21 வயது நிரம்பிய குடும்பஸ்தரான அருணாசலம் சந்திரமோகனின் கொலை சம்பந்தமாக பல சந்தேகங்கள் எழுந்துள்ளதால் இக் கொலைகள் சம்பந்தமாக இளைப்பாறிய சிரேஷ்ட நீதியரசர் ஒருவர் தலைமையில் ஒரு நீதி விசாரணைக் கமிஷன் நியமித்து சம்பந்தப்பட்ட கொலையாளிகளை நீதியின் முன் நிறுத்த நடவடிக்கை மேற் கொள்ளும்படி மட்டக்களப்பு மாவட்ட எம். பியும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் பாராளுமன்றக் குழுவின் தலைவருமான ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கா குமாரதுங்காவைக் கேட்டுள்ளார்.

இது சம்பந்தமாக யோசப் பரராஜசிங்கம், எம். பி. ஜனாதிபதியின் கவனத்திற்கு மேலும் கொடுத்துள்ள தகவல்களில் தெரிவித்துள்ளதாவது.

கடந்த 9 ஆம் திகதி அன்று சித்தாண்டியில் கொலை செய்யப்பட்ட அருணாசலம் சந்திரமோகனின் மரண விசாரணையின் போது சாட்சிய மளித்த அவரது மனைவி மேற்படிகொலைக்கு இராணுவத்தினரே காரணம் என்று குற்றஞ் சாட்டியுள்ளார். அது மட்டுமல்ல தனது கணவரை இராணுவத்தினர் வெட்டிக் கொண்டு விட்டதாகவும், இதைக் கேள்விப்பட்டு தான் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்ற போது தனது கணவரின் தலையை 'சொப்பிங்' பை ஒன்றில் போட்டுக் கொண்டு இராணுவத்தினர் வருவதைத் தான் கண்டதாகவும் தெரிவித்துள்ளார். அது மட்டுமல்ல மரண விசாரணையின் போது தலையும்- உடலும் புறம்பாகவே இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டுள்ளது.

இச் செயல் மனிதாபிமானமற்ற காட்டு மிராண்டித்தனமான கண்டிக்கத் தக்க செயலாகும். நாகரிக உலகில் இது போன்ற கொலைகள் இடம் பெறுவது மிகவும் கண்டிக்கத் தக்கதாகும்.

எனவே இக் கொலை சம்பந்தமாக இளைப்பாறிய சிரேஷ்ட நீதியரசர் தலைமையில் ஒரு விசாரணைக் கமிஷனை உடனடியாக நியமித்து சம்பந்தப்பட்ட கொலையாளிகளை நீதியின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவும்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க-101)

## கனேடிய நிதி உதவியுடன் இளவாலையில் அபிவிருத்தித்திட்டம்

(இளவாலை)

வேளாண்மியம் இளவாலைக் கிளையின் ஆண்டுவிழாவும் கூட்டு முறற்சி நிலையங்களின் திறப்புவிழாவும் கடந்த 12, ஆம் திகதி இளவாலையில் நடை பெற்றது.

இக் கூட்டு முயற்சி நிலையங்களுக்கு கனடா நிதிஉதவி வழங்கும் நிறுவனமான ''கபெட்'' நிறுவனம் ''கியூடெக்'' நிறுவனத்தின் மூலம் 5 இலட்சம் ரூபா பெருங் கடன் திட்டத்தின் கீழ் நிதி வழங்கியுள்ளது.

இளவாலைக் கிளை வேளாண்மியத்தின் அங்கத்துவக்கிளைகளான ஆறுபங்குகளைக் கொண்ட அங்க நிலையத்தினர் தனித்தனியான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

கிருமி நாசினி விற்பனை நிலையம். பலசரக்கு விற்பனை நிலையம், இலத்திரனியல் நிலையம், மற்றும் கதிரை, சரம், பாத்திரங்கள் வாடகைக்கு விடுதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

காலை 9.30க்கு ஆரம்பமான இவ் வைபவத்திற்கு மனிதமுன்னேற்ற கழக [கியூடெக்] இயக்குநர் அருட்திரு சி. ஜீ. ஜெயக்குமார் அடிகள் பிரதம விருந்தினராகவும் இளவாலைப் பங்குத்தந்தையும் வேளாண்மிய காப்பாளருமான அருட்திரு சி. ஜே அன்ரனி பாலா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர்.

(க-12)

## இடம் பெயர்ந்தவர்களுக்கு இல. செஞ். சங்கம் உதவி

(தென்மராட்சி)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையினர் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தஞ்சமடைந்திருந்த குடும்பங்களுக்கு முதல் கட்டத்தில் 1800 பாய்களையும் 3300 சோப்களையும் 950 பிளாஸ்ரிக் வாளிகளையும் 12 நுளம்பு வலைகளையும் 16 பேபி செட்களையும் வழங்கியுள்ளது.

இரண்டாம் கட்டத்தில் குழந்தைகள்,கர்ப்பிணித்தாய்மார் பாலூட்டும் தாய்மார் வலதுகுறைந்தோர்மற்றும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் 305 படுக்கைவிரிப்புகள், 305 துவாய்கள், 300சோப், 6 நுளம்பு வலைகள் 9 பேபி செட் போன்றவற்றினையும் வழங்கியதாக மாவட்டக் கிளையின் பொதுச் செயலாளர் கே. தியாகராஜா தெரிவித்துள்ளார். [செ-77]

## குழாய் நீர் விநியோகம்

(தென்மராட்சி)

போரூட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கொற்றாவத்தை அமெரிக்க மிசன் தமிழ்க்கலவன்பாடசாலைக்கு குழாய் நீர் விநியோகத் திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்துக்கென போரூட் நிறுவனம் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

பொலிகண்டி வீரபத்திரர் ஆலயத்தின் கிணற்றில் இருந்தே இத்திட்டத்திற்கான குடி நீர் குழாய் மூலம் பெறப்படுகின்றதுஎனத்தெரிய வருகின்றது. (க-77)

## சாண்டோ ஸ்ரீதாஸின் சாதனைகள்

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஆகஸ்ட் மாதம் 14-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தரப்படுகின்றது:

(நேற்றைய தொடர்)

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 143894 ஏ | 150408 ஏ |
| 150408 பி | 150493 ஏ |
| 150505 ஏ | 150505 பி |
| 150505 சி | 150530 ஏ |
| 150530 பி | 150618 ஏ |
| 150634 ஏ | 150634 பி |
| 150634 சி | 150634 டி |
| 150759 ஏ | 150759 பி |
| 150786 ஏ | 150786 பி |
| 151974 ஏ | 151974 பி |
| 151974 சி | 151974 டி |
| 152134 ஏ | 153207 ஏ |
| 153207 பி | 153450 ஏ |
| 153450 பி | |

### உடுவில்

| | |
|---|---|
| 141933 ஏ | 143807 ஏ |
| 146491 ஏ | 150486 ஏ |
| 150504 ஏ | 150504 பி |
| 150521 ஏ | 150521 பி |
| 150649 ஏ | 150649 பி |
| 150649 சி | 150677 ஏ |
| 150733 ஏ | 150743 ஏ |
| 150778 ஏ | 150781 ஏ |
| 150781 பி | 150781 சி |
| 150781 டி | 151089 பி |
| 151787 ஏ | 151787 பி |
| 151792 ஏ | 151892 ஏ |
| 151829 பி | 151829 சி |
| 151829 டி | 151830 ஏ |
| 151838 ஏ | 151838 பி |
| 151855 ஏ | 151893 ஏ |
| 151893 பி | 151899 ஏ |
| 151902 ஏ | 151902 பி |
| 151918 ஏ | 151918 பி |
| 151918 சி | 151932 ஏ |
| 152001 ஏ | 152036 ஏ |
| 152036 பி | 152036 சி |
| 152036 டி | 152039 ஏ |
| 152050 ஏ | 152063 ஏ |
| 152063 பி | 152065 ஏ |
| 152065 பி | 152078 ஏ |
| 152078 பி | 152088 ஏ |
| 152088 பி | 152110 ஏ |
| 152110 பி | 152110 சி |
| 152152 ஏ | 152162 ஏ |
| 152224 ஏ | 155136 ஏ |
| 155136 பி | 155175 ஏ |
| 155175 பி | |

### வேலணை

| | |
|---|---|
| 13380 ஏ | 13416 ஏ |
| 13416 பி | 13504 ஏ |
| 13504 பி | 13515 ஏ |
| 13519 ஏ | 13519 பி |
| 13519 சி | 13519 டி |
| 13520 ஏ | 13526 ஏ |
| 13533 ஏ | 13533 பி |
| 13543 ஏ | 13543 பி |
| 13546 ஏ | 13558 ஏ |
| 13572 ஏ | 13572 பி |
| 13572 சி | 13572 டி |
| 13572 ஈ | 13577 ஏ |
| 13577 பி | 13577 சி |
| 13577 டி | 13577 ஈ |
| 13581 ஏ | 13584 ஏ |
| 13588 ஏ | 13588 பி |
| 13588 சி | 13588 டி |
| 13588 ஈ | |

[நா-சு]

## மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்ட ஐஸ்பழ வியாபாரி; கோப்பாயில் சம்பவம்

### மதுபோதையில் வந்தவர் அட்டகாசம்

[கோப்பாய்]

மதுபோதையில் வந்த ஒருவரால் ஐஸ்பழ வியாபாரி மூர்க்கத்தனமாகத்தாக்கப்பட்ட சம்பவம் கோப்பாய் பகுதியில் அண்மையில் இடம் பெற்றுள்ளது.

சனநடமாட்டமற்ற பகுதியில் வீதியால் சென்ற ஐஸ்பழ வியாபாரியிடம் 10 ஐஸ் செக்குகளை வாங்கிய பிரஸ்தாபநபர் அங்குநின்ற சிறுவர்களுக்கு கொடுத்தாராம்

பணம் கேட்ட போது பணம் தரமுடியாது எனக்கூறியதுடன் ஐஸ்பழ வியாபாரியை மதுபோதையில் வந்தவர்மிரட்டியதோடுதாக்கவும் தொடங்கிவிட்டார்;

ஐஸ்பழ வியாபாரியிடமிருந்த பணமும் சம்பந்தப்பட்டவரால் பறிக்கப்பட்டதாம்

இது விடயம் சம்பந்தமாக உரியநடவடிக்கை எடுப்பது குறித்து ஐஸ்பழ வியாபாரி ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க-79]

## வலயக் கல்வி பணிப்பாளர் வேண்டுகோள்

(அச்சுவேலி)

2000 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட முறைசாராக் கல்விதொழிற்திறன் பயிற்சி, எழுத்தறிவூட்டல் பின்னூட்டல்ஆகிய வறறை கற்பிக்கும்ஆசிரியர்களுக்கான சேவைக் காலக்கருத்தரங்கு நாளை புதன்கிழமை காலை 10.00மணிக்கு வலயக் கல்விப்பணிமனையில் நடைபெறவுள்ளது.

அதிபர்கள் இவற்றைக்கருத்திற் கொண்டு தவறாது ஆசிரியர்கள் பங்குபற்றுவதற்கு ஏற்ற ஒழுங்குகளை மேற் கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுக்

பெறப்படுகின்றதுஎனதெரிய வருகின்றது. (க-77)

உரியநடவடிக்கை எடுப்பது குறித்து ஐஸ்பழ வியாபாரி

கல்விப்பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (க-14)

# சாண்டோ ஸ்ரீதாஸின் சாதனைகள் மட்டக்களப்பில் அரங்கேற்றம்

## மனித மலை எனப் புகழாரம்

[மட்டக்களப்பு]

பேராசிரியர் சாண்டோ சங்கரதாஸின் ஒரே சீடரான சாண்டோ வி. ஸ்ரீதாஸ் ஓடுகின்ற 36 உழவு இயந்திரங்களைத் தனது மார்பின் மேல் ஏற்றிய மயிர்க்கூச்செறியும் காட்சி கடந்த சனிக்கிழமை மட்டக்களப்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மைதானத்தில் இடம் பெற்றது.

அத்துடன் அவரது 9 வயது நிரம்பிய மகளான குட்டிச் சாண்டோ யோகேந்திரதாஸின்மார்பில் மேல், ஓடும் காரினை ஏற்றிச் சாதனை நிகழ்த்தியுள்ளார்.

இவை தவிர பாரிய இரும்புக் கம்பிகளை பல், மூக்கு, தலையினால் வளைத்தல், 1500 இறாத்தல் செங்கற்களை வயிற்றில் சுமத்தல் உட்பட 16 சாகஸங்களை இவர்கள் நிகழ்த்தியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் இ. மௌனகுருசாமி உட்பட பெருந்தொகையானவர்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டார்கள்.

மேற்படி நிகழ்விற்கு வருகை தந்திருந்த ரஷ்ய நாட்டைச் சேர்ந்த அலக்ஸ் என்பவர் மனித மலை என்ற பட்டத்தைச் சூட்டினார்.

(சு-60)

# நோயாளர் பராமரிப்புக்கு ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை நோயாளர் பராமரிப்புச் சேவைக்கான ஆட்சேர்ப்பு நாளை காலை 9 மணியளவில் இடம்பெறவுள்ளது.

யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவுக்கு முன்னால் அமைந்துள்ள சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் நோயாளர் பராமரிப்பு நிலையத்தில் இவ் ஆட்சேர்ப்பு நேர்முகத் தேர்வு நடைபெறும்.

இதில் பங்குகொள்ள விரும்புவோர் அண்மையில் பெறப்பட்ட இருநற்சான்றிதழ்களுடன் சமூகம் தரும்படி சென். ஜோன்ஸ் அப்புலன்ஸ் படைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

(உ)

# நிர்க்கதி நிலையில் அவதியுறும் தென்மராட்சி வைத்தியர்கள்

(தென்மராட்சி)

தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த சித்த ஆயுள்வேத வைத்தியர்கள் தமது வைத்தியத் தொழிலை மீண்டும் மேற்கொள்வதற்குரிய அடிப்படை ஆதாரங்கள் இல்லாமையினால் பெரிதும் கஷ்டமடைந்து வருகின்னர்.

சித்தஆயுள்வேதவைத்தியத்தில் பயன்படுத்துகின்ற மருந்துவகைகள், குளிகைகள், குழம்புகள், சூரணங்கள் மற்றும் எண்ணெய் வகைகள் தயாரிப்பது பற்றிய பழைய நூல்கள் மற்றும் குறிப்புகளை இத்தகைய வைத்தியர்கள் கைவிட்ட நிலையிலேயே வலிகாமப் பகுதிக்கு வந்துள்ளனர்.

குறிப்பாக இவ்வைத்தியர்களால் பயன்படுத்தப்பட்ட மிகவும் பெறுமதிவாய்ந்த நூல்கள் மற்றும் சுவடிகளும் கைவிடப்பட்டுவிட்டன.

அத்துடன் புதிய இடங்களில் தமது தொழிலை மேம்படுத்திச் கொள்வதற்குப் போதிய மருத்துவ உபகரணங்கள் மற்றும் தளபாடங்களும் இல்லாமல் இருப்பதாகவும், அதன் காரணமாக தம்மை நாடிவருகின்ற நோயாளர்களுக்கு நிறைவான வைத்திய சேவை வழங்க முடியாமல் இருப்பது பற்றியும் அவர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. (க-77)

# மட்டக்களப்பில் 50 வீதமான சமூக அபிவிருத்திப் பணி நிறைவேறியது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சமுர்த்திஅபிவிருத்தி அதிகாரசபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் 114 சமூக அபிவித்திப்பணிகளில் இற்றைவரை 50 வீதமான பணிகள் பூரத்தி செய்யப்பட்டுள்ளன.

இதற்கென 87 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது இதுவரை15 லட்சம்ரூ. செலவு சய்யப்பட்டுள்ளதென மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் ஆர். நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

மேற்படி திட்டங்களில் 16 அபிவிருத்திப் பணிகள் முழுமையாகப்பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

மண்முனை வடக்கில் மேற்கொள்ளப்படும் 16 திட்டங்களில் 8 திட்டங்கள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை சமுர்த்தி கிராமியப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்குஎனவும் நிதிஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

[க]

## இன்று ஒரு தகவல்

# மரணத்தின் இறுதியில் மனிதன் தன்னை உணர்கிறான்

ஆருடம் பார்க்கும் அமுதனும் பிஸிநெஸ் செய்யும் கோவிந்தனும் நல்ல நண்பர்கள்.

ஒரு நாள் கோவிந்தன் அமுதனைச் சந்திப்பதற்காக அவருடைய வீட்டுக்குப் போய் இருந்தார்.

வாருங்கள் கோவிந்தன்! என்று அவரை வரவேற்ற அமுதன். ''உங்கள் மகளுக்கு 30 வயது ஆகிறது. அவளுக்கு எப்போது திருமணம் செய்யப் போகிறீர்கள்'' என்றுகேட்டார்.

இப்போது கல்யாணத்துக்கு என்ன அவசரம்? நல்லமாப்பிள்ளை கிடைக்கும் போது கல்யாணம் செய்யலாம் என்றார் கோவிந்தன். அதுபோகட்டும். பிஸினஸ் அது நொண்டி அடிக்கிறது. பணம் வாங்கியவர்கள் எல்லாம் பட்டை நாமம் போடப் பார்க்கிறார்கள் என்று சிரித்தார் கோவிந்தன்.

''எதை எடுத்தாலும் உங்களுக்கு விளையாட்டுத்தனா கோவிந்தன்? எங்கே, உங்கள் கையை நீட்டுங்கள்!'' என்றார் அமுதன். கோவிந்தன் தன்னுடைய கையை நீட்டினார்.

அமுதன் அவரது வலது கையில உள்ள ரேகையைப் பார்த்துவிட்டு உதடுகளைப் பிதுக்கினார்

''கோவிந்தன்! ஒரு அதிர்ச்சியான செய்தியைச் சொல்லப் போகிறேன். மனதைத் திடப்படுத்திக் கொள்ளுங்கள் இன்றில் இருந்து 30 நாட்களுக்குள் நீங்கள் இறந்து விடுவீர்கள் ஆயுள்ரேகை அவ்வளவுமோசமாகவுள்ளது'' என்றார்.

அதைக் கேட்ட கோவிந்தனின் முகம் இருண்டது. ஒன்றும் பேசாமல் எழுந்து வீட்டிற்குச் சென்றார். சாவைப் பற்றி யாரிடமும் எதுவும் பேசவில்லை. சாப்பிடவில்லை அன்று இரவு உறங்கவும் இல்லை.

நான் இன்னும் ஒரு மாதம் தான் உயிரோடு இருக்கப் போகின்றேன் அதற்குள மகளுக்கு கல்யாணம் செய்து விடவேண்டும். இது வரை வராத துடன்களை எல்லாம் வசூல் செய்துவிடவேண்டும் என்று தீர்மானித்து, சுறுசுறுப்பாக வேலை செய்து விடவேண்டும் என நினைத்தார். இரவு, பகலாக அலைந்து, வரவேண்டிய பணத்தை எல்லாம் வசூல் செய்து தன் மனைவியின் பெயரில் வங்கியில் போட்டார். மகளின் திருமணத்தையும் முடித்தார்.

கடமைகளை எல்லாம் செய்து முடித்த கோவிந்தன், மகிழ்ச்சியுடன் சாவை எதிர்பார்த்தார். ஆனால் அமுதன் கூறியபடி அவர் 40 நாட்கள் ஆகியும் சாகவில்லை.

ஒன்றும் புரியாமல் குழம்பிய கோவிந்தன், அமுதனைச் சந்தித்து, ''அமுதன்! நீங்கள் சொன்னபடி நான் இன்னும் சாகவில்லை'' உங்கள்ஆருடம் பொய்யா? என்று கேடாட்ர்.

நான் பொய் ஆருடம் தான் சொன்னேன். நான் அப்படிச் சொல்லாவிட்டால், நீங்கள் சுறுசுறுப்பாக வேலைசெய்து இருப்பீர்களா? வராத கடன்களை எல்லாம் வாயு வேகத்தில் வசூல் செய்து இருப்பீர்களா? என்று சிரித்தார் அமுதன்.

''மரணபயத்தைக் காட்டி, என்னை உழைப்பாளி ஆக்கிய உங்களுக்கு நன்றி'' என்றார் கோவிந்தன்.

மரணத்தின் இறுதித் தறுவாயில் மனிதன், அதாவது மரணம் அணுகிய கணங்களில் ஒருவகையில் சோர்ந்து போகிறான். அல்லதுசுறுசுறுப்பாகிறான். ஏனெனில் அவனது உலகப் பற்றுகள்மரணத்தில் முற்று பெறுகின்றன மரணம் ஜீவதவாசலில் கதவடைப்பு அல்லவா?

தென்கச்சி சுவாமிநாதன்

# பாகிஸ்தான் தூதுவராக ஸ்ரீலால் வீரசூரியா

(கொழும்பு)

இராணுவ படைத் தளபதி லெப்ரினன் ஜெனரல் ஸ்ரீலால் வீரசூரியா இம்மாத இறுதியில் ஓய்வு பெற்று பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவராகச் செல்லவுள்ளதாகத் தெரியவருகிறது.

ஸ்ரீலால் வீரசூரியாவின் இடத்திற்கு மேஜர் ஜெனரல் லயனல் பல்லேகல இராணுவத் தளபதியாகப்பதவி ஏற்கவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளைபாகிஸ்தானிய இராணுவ ஆட்சியாளர் முஷராப்பும் ஸ்ரீலால் வீரசூரியாவும் படைத்துறைக் கல்லூரியில் ஒன்றாகக் கற்றவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

## துவிச்சக்கர வண்டி வால்வ்கட்டை

# கழற்றிய சம்பவத்திற்கும் தமக்கும் தொடர்பில்லை

## மக்கள் நலன் புரிச் சங்கம் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

அண்மையில் நல்லூர் நாவலர் மண்டபத்திற்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டிகளின் வால்வ் கட்டைகளைக் கழற்றிய சம்பவத்திற்கும் தமக்கும் எது விததொடர்பும் இல்லையென மக்கள் நலன் புரிச்சங்க தொண்டர் சபை அறிவித்துள்ளது.

நாவலர் மண்டபத்திற்கு முன்னால் நிறுத்திவைக்கப் பட்டிருந்த துவிச்சக்கரவண்டிகளின் வால்வ் கட்டைகளைக் கழற்றும் முயற்சியில் ஈடுபட்ட மக்கள் நலன்புரிச் சங்கத் தொண்டர் தாக்கப் பட்டதான செய்தியை அவர்கள் மறுத்துள்ளனர்,

அத்துடன் அவ்வாறு தாக்கப்பட்டவர் தற்போது மக்கள் நலன்புரிச்சங்கத் தொண்டராக இயங்குவதில்லை என்பதையும் அவர்கள் தெளிவு படுத்தியுள்ளனர்.

இதேசமயம், ஆலய சூழலில் அமைதியுடனும் தன்னடக்கத்துடனும் சகலரும் நடந்து கொண்டால் தேவையற்ற நிகழ்வுகளை தவிர்த்துக் கொள்ள முடியும் என நலன் விரும்பிகள் தெரிவித்துள்ளனர். (உ)

# நல்லையில் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய இந்துப் பேரவையின் நல்லைக் கந்தன் உற்சவ காலத் தெய்வீக நிகழ்ச்சிகள் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை ''வாசகரும் வாசகனும்'' என்னும் தலைப்பில் சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் சொற்பொழிவாற்றவுள்ளார்.

இந்நிகழ்வு அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் பி.ப. 2.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (செ)

# படையினர்க்கு பூங்கா

(கொழும்பு)

பேராதனையில் படையினர்க்கான பூங்கா ஒன்று அண்மையில் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவினால் திறந்துவைக்கப்பட்டது.

பொதுநிர்வாக அமைச்சின், 160 இலட்சரூபா நிதியுதவியுடன் இப் பூங்கா அமைக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசசபை பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடும் பணியில் இன்று செவ்வாய்க் கிழமை,

காலை 9.00 மணி தொடக்கம் மு.ப. 11.00 மணிவரை திருநெல்வேலி வை.எம்.சீ.ஏ இலும்,

மு.ப. 11.30 மணிதொடக்கம் பி.ப. 1.30 மணிவரை அம்மன் வீதி கலைக்கோவிலடி சி; நிலையத்திலும் தடுப்பூசி போடப்படும். (செ)

# பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடை ஆலடி வீரகத்தி விநயகர் ஆலய வருடாந்த அலங்கார திருவிழாவின் போது பத்து நாட்கள் தொடர் சொற்பொழிவாற்றியமைக்காக வ. குமாரசாமி ஐயா ஆலய நிர்வாகத்தினரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார் (செ)

# புதிய நிர்வாகிகள் தெரிவு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் தட்டா தெருச்சந்திகலாஜோதிஇளைஞர் ஒன்றிய புனரமைப்பு மற்றும் புதிய நிர்வாக உறுப்பினர்தெரிவுக்கூட்டம் அண்மையில் இடம் பெற்றது.

புதிய நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திருநாவுக்கரசு செயலாளராக தவகோபால் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்களாக நல்லூர் செயலர்கே.குணராஜா, மேலதிக அரசாங்கஅதிபர் ரி.வைத்திலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்;

இக் கூட்டத்தில் முக்கியமான 5 தீர்மானங்களும்எடுக்கப்பட்டன. (உ)


# 6 கடைகள் முற்றாக நாசம்

(கொழும்பு)

உடப்புசல்லாவையில் ஏற்பட்ட தீவிபத்தில் ஆறு வர்த்தக நிலையங்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இத்தீவிபத்திற்கு மின் ஒழுக்கே காரணம் என்றும் வர்த்தக உரிமையாளர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (க)

# நல்லூரான் திருவடிக்கு - 11



## நல்லூரில் குடிகொண்ட நாயகனே காத்திடப்பா!

அருணகிரி திருப்புகளில் அலங்கரித்த கந்தனே!
தருணமிதில் நீயெமக்குத் தரவேண்டும் அருளை
ஒருகணமும் நிம்மதியின் அருகதையே இல்லாமல்
வருந்துகின்ற தமிழர்க்கோர் வசந்தத்தை தாராய்!

பல்குழலும் வேட்டொலியும் பாய்ந்துவந் தெமைக் கலக்க
பல்லூரும் ஓடிஓடிப் பாதமெலாம் தேய்ததுவே!
சொல்லியழ ஆரெமக்கு செவ்வேளே கண்பாராய்!
நல்லூரில் குடிகொண்ட நாயகனே காத்திடப்பா!

நீர்வையூர் பராபரன்

## நல்லைக் கந்தன் நம்பக்கமே

இராகம் சங்கராபரணம் — தாளம்- ஆதி

நல்லூருக் கந்தன் நம்பக்கம் இருந்தால்
நமக்கெல்லாம் ஏது குறை
சொல்லுங்கள் ''ஓம்முருகா'' சுகம்பல தந்திடுவான்
சுவையிலே ஏது கறை
வெல்லுங்கள் வெவ்வினையை வீழ்ந்து உருளுங்கள்
விலகிடுமே இயமச்சிறை
தள்ளுங்கள் தங்கரதம் தரணியிலே சாந்தி
தந்திடுவான் பல முறை

நல்லூருச் செவ்வேள் நலம்பல செய்வான்
நம்புங்கள் நாட்டினரே
நில்லுங்கள் சற்று நிம்மதி வேண்டில்
நிமலனை நினைப்பீரே
சொல்லுங்கள் கவின் பாடல் கசிந்துருகிக் கண்ணீர்
கழியுங்கள் கணப்பொழுது
வெல்லுங்கள் வெவ்வினையை வெற்றிவேல் துணை நிற்க
வீழ்ந்து வணங்கிடுவீர்.

ஆக்கம் கீழ்கரவை- செல்லையா

## நல்லூர்க் கந்தன் பாமாலை

ஓசை ஒளியாலே ஊற்றாகும் உள்ளத்தின்
தேசையெலாம் நல்லூரிற் தேடலாம் ஆசையுடன்
ஆணவமும் போகும் அமர்ந்து தியானிக்கக்
காணலாங் கந்தன் கழல்
ஓசை எழுப்புகிறார் உள்ளத்தைத் தொட்டதனால்
பூசையிலே எண்ணம் புகுந்து விடும் ஆசையெல்லாங்
காற்றாய்ப் பறந்து விடுங் கந்தாவுன் நல்லூரில்
ஊற்றாகும் உள்ளத் தொளி.

இறைமணி சி. இராசரத்தினம்

## நல்லை வேலவனே!

பெரல்லா வினையறுத்து
பூத கணங்களடக்கி
வல்ல முருகா வரங்கள் தா
பல ஈர்ந்தருள் புரிந்து
கல்லா என்னை கற்றோர்
சபை முன் சமரசமாக்கிய
நல்ல முருகா நல்லையில்
யதி கொண்ட வேலவனே!

இராம ஜெயபாலன்

# அரசியல் சீர்திருத்தத்தை விளக்க பிரதமர் தலைமையில் உப குழு

(கொழும்பு)

அரசியல் அமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக மக்களிடையே எழுந்துள்ள ஐயப்பாடுகளை விளக்கும் முகமாக அமைச்சர்கள் அடங்கிய உபகுழு ஒன்றை ஜனாதிபதி உருவாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவராக புதிய பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா இருப்பதுடன் அமைச்சர்களான பேராசிரியர்ஜி.எல்.பீரிஸ், டி எம்ஜெயரெட்ணா, பட்டி வீரக்கோன், எம்.ஏச்.எம் அஸ்ரப் ஆகியோரும் இடம் பெறுவர். (ந-7)

யாழ்ப்பாணம்
நாவாந்துறைப் படிப்பகம்

## அமெரிக்க அணுகுண்டு கிறீன்லாந்து கடற் பகுதியிலாம்

### பிரிட்டிஷ் பத்திரிகை தகவல்

[வோஷிங்டன்]

அமெரிக்காவின் வெடிக்காத அணுகுண்டு ஒன்று 30 ஆண்டுகளுக்கும் மேலாக கிறீன்லாந்து கடற்கரைக்கு அண்மித்த கடலடித்தளப் பகுதியில் இருப்பதற்கான சான்றுகள் இருப்பதாக பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

1968 ஆம் ஆண்டில் தூல் விமானத் தளத்திற்கருகே ஆட்டிக்சமுத்திரத்தில் மூழ்கிவிட்ட பீ 52 ரக அமெரிக்க குண்டு வீச்சு விமானத்தில் 4 அணுக்குண்டுகள் இருந்ததாகவும் அவற்றில் மூன்றை மட்டுமே அமெரிக்கா கைப்பற்றியிருந்ததாகவும் இரகசிய ஆவணங்களில் இருந்து தெரியவந்திருப்பதாகவும் பிரிட்டிஷ் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதே சமயம்,

அமெரிக்காவின் உலகம் தழுவிய ஏவுகணை எதிர்ப்புத் திட்டத்தின் ஓர் அங்கமாக மேற்படி தூல் விமானத் தளத்தினைப் பயன்படுத்துவது குறித்த விசாரணைகளுக்கென அமெரிக்க அதிகாரிகள் குழு கிறீன்லாந்து செல்ல விருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ)

## காஷ்மீர் சமாதான பேச்சுவார்த்தை மீண்டும் ஏற்படும் என்கிறார் முதல்வர்

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் தொடங்கும் என்று மாநில முதல்வர் பாரூக் அப்துல்லா தெரிவித்தார்.

ஸ்ரீநகரில் ஆகாசவாணி மற்றும் தூரதரிசன் நிலையங்களுக்கு அண்மையில் வழங்கிய பேட்டியில் காஷ்மீர் மக்கள் வன்முறைகளை ஆதரிக்க மாட்டார்கள் என்றும் தீவிரவாதக்குழுக்களுடன் ஏற்கவே பேச்சுவார்த்தைகள் தொடங்கி விட்டதாகவும் இதைப் பயன் படுத்தி கொள்ள வேண்டுமென்று அவர் கூறினார்.

காஷ்மீர் விடயத்தில் முறைப்படியானபோர் மூளும் அச்சுறுத்தல் பற்றி கேட்கப்பட்ட போது இதுபேரழிவைத் தான் ஏற்படுத்தும் என்றும் இந்தவழியை நாடலாமென்று நான் யோசனை கூற முடியாதென்றும் காஷ்மீர் முதலமைச்சர் டாக்டர் பாருக் அப்துல்லா தெரிவித்தார்.

இதேவேளையில் பேச்சு வார்த்தைகள் எந்த வித விளம்பரங்கள் இன்றி அமைதியாக ஒழுங்காக நடைபெற வேண்டும் என்று அவர் வலியுறுத்திக் கூறினார். (து)

# கொங்கோ நாட்டில் விமான விபத்து

# சிப்பந்திகள் உட்பட 27 பேர் பலி

### எங்கும் ஒரே புகை மூட்டம்

(கொங்கோ)

கொங்கோவில் சரக்குவிமானம் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த 6சிப்பந்திகள் உட்பட 27பேர் கொல்லப்பட்டனர்.

ரஷ்யத் தயாரிப்பான அன்ரனோவ்ரக மேற்படி விமானம் விபத்துக்குள்ளான காரணம் குறித்து தகவல் எதுவும் இதுவரை அறியப்படவில்லை.

கொல்லப்பட்டவர்களில் 13 பேரின் சடலங்கள்மட்டுமே இதுவரை மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சடலங்கள்மீட்கும் பணிகள் தொடர்ந்து இடம்பெற்றுவருவதாக தகவல்த் துறை தவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விமான அனர்த்தம் இடம் பெற்ற பகுதி ஒரேபுகை மூட்டமாக காணப்படுவதாகவும் விமானத்தின் சிதைந்தபாகங்கள் தரைஎங்கும் சிதறிக்கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

விமான விபத்து குறித்து விசாரணைகள் துரிதகதியில் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் நேற்று பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிதுள்ளன.

(உ)

## ஜெருசலேம் விவகாரத்தில் எதுவித விட்டுக் கொடுப்பிற்கும் இடமில்லை; முபாரக் தெரிவிப்பு

(கெய்ரோ)

ஜெருசலேம் விவகாரத்தில் எதுவித விட்டுக்கொடுப்புகளிற்கும் இடமில்லை. விட்டுக் கொடுப்பு ஏற்படுமானால் அது அரபு நாடுகளைப் பாதிக்கும் என எகிப்திய அதிபர் ஹுஸ்னி முபாரக் தெரிவித்துள்ளார்.

நேற்றுச் செய்தியாளர் மத்தியில்பேசுகையில் மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

ஜெருசலேம் பிரச்சினை மதங்களோடு சம்பந்தப்பட்ட பிரச்சினை. இதை அரபு அல்லது இஸ்லாமிய நாடுகளின் தலைவர்கள் எவரும் கிழக்கு ஜெருசலேமினை விட்டுக் கொடுக்கமாட்டார்களென்று சுட்டிக் காட்டினார்.

பலஸ்தீன மக்களின் நலன்களுக்குப் பொருத்தமான உடன் படிக்கையை ஏற்றுக் கொள்ளுமாறு பலஸ்தீனத் தலைவர்களை எகிப்து எப்பொழுதாவது வற்புறுத்தியதில்லை. இனி மேலும் வற்புறுத்தப்போவதில்லை என்று எகிப்திய அதிபர் முபாரக் வலியுறுத்தியுள்ளார்.

(து)

### உலக தரிசனம்

## அமெரிக்க ஜனாதிபதி கிளிங்டனுக்கு ஹொலிவூட் நடிகர்கள் நிதிசேமிப்பு

(லொஸ்ஏஞ்சல்)

அமெரிக்கஜனாதிபதித்தேர்தலுக்கு முன்னோடியாகநிதி சேர்த்துக்கொடுப்பதுஹொலிவூட்நடிகர்களின் வழக்கம், இம்முறை வழக்கத்துக்கு மாறாக விலகிச் செல்லும் ஜனாதிபதிக்கு நிதிசேர்க்கிறார்கள்.

இரண்டொரு நாட்களில் நடைபெற இருக்கும்ஜனநாயகக்கட்சி மகாநாட்டிற்கு முன்பாக எதுவும்ஜனநாயகக் கட்சிசார்பில் போட்டியிடும் பிரதிநிதி அல் கூரின் கட்சிப் பிரசாரத்துக்குமுன்பாகஇந்த ஹொலிவூட் நடிகர்களின் விருந்து நடக்கிறது.

ஹொலிவூட் நடிகர்கள் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் தனியார் பண்ணையொன்றில் இந்த விருந்தைநடத்துகிறார்கள்.

பில் கிளிங்டன் அவரது மனைவி ஆகியோர் கலந்து கொள்ளும் விருந்தில் மற்றையோருக்கு விருந்துக்கான ரிக்கற்றுகள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றனவென்றும் 1இலட்சம் டொலர் பெறுமதியான ரிக்கற்றுகள்

சபைத் தேர்தலுக்கும் பில் கிளிங்டன்ஆமைத்துக்கொண்டிருக்கும்மாளிகையின்அமைப்புக்குப் பயன்படுத்தப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு நிதிக்காகவும் 14 பில்லியன்டொலர்கள்சேகரிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை உண்மையில் அமெரிக்க ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் அல்கூர் அவர்களுக்குத்தான் நிதி கூடுதலாகச் சேர்த்துக் கொடுத்திருக்க வேண்டும்என்றும் கட்சிவளர்ச்சிக்கு உதவ ஹொலிவூட் நடிகர்கள் பின்நிற்கிறார்களென்றும் கிளிங்டன் குடும்பத்திற்கு ஹொலிவூட்டிற்கும் ஏதோநெருங்கிய தொடர்பு இருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

இதேவேளை தேர்தலில் நிற்கும் அல்கூர் சார்பாக நடக்க இருக்கும் ஹொலிவூட் விருந்தும் அவரது முனைப்பும் மழுங்கடிக்கப்படுமென்றும் அவதானிகள் கருதுகின்றனர்.

விருந்து முடிந்தபின் பில்

## வன்முறைகளை சாடும் வகையில் ஜேர்மனியில் ஆர்ப்பாட்ட பேரணி

ஜேர்மனியில் மென்மேலும் தலைவிரித்தாடும் வலது சாரி சக்திகளின் வன் செயல்களை எதிர்க்கும் வகையில் தலைநகரில் மூவாயிரம்பேர்ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தியுள்ளனர்.

நகராட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணி தொடர்பாக கருத்து நகராட்சித்தலைவர் தெரிவிக்கையில் இனப்பகைமை தோன்றுவதை தான்முழுமையாக எதிர்ப்பதாக தெரிவித்தார்.

அண்மைக்காலத்தில் வந்தேறு குடிகளின் புதிய நாஜிகளும்வலது சாரிசக்திகளும் வன்முறைகளில் ஈடுபட்டுவருகின்றன. இது ஜேர்மன் அரசுக்கு பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

இந்த வலது சாரி அமைப்புகளின் வன்முறைகளை ஜேர்மன் கூட்டாட்சியினரும் பல்வேறு மாநில அரசுகளும் கூட்டாக முறியடிக்குமென்று மேலும் அவ்வூர் வலத்தின் போது எடுத்துக் கூறினார்.

[து]

## சாவின்விளிம்பில் எத்தியோப்பியர் உதவிபுரியுமாறு அழைப்பு

(லண்டன்)

எத்தியோப்பாவில் பட்டினிச்சாவை எதிர் நோக்கி நிற்கும் பலலட்சக் கணக்கா

ளது.

ஒரு கோடியே 50 இலட்சம் மக்கள், எத்தியோப்பியாவில் பட்டினிச்சாவை எதிர்நோக்

டம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் 55 இலட்சம் பேருக்கு உடன

கும் பலலட்சக் கணக்கானோர்க்கு உணவுப்பொருள் வழங்கி உதவிபுரியுமாறு, உலக நாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் உணவுத்திட்டம் வேண்டுகோள் விடுத்துள்

பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளதாகவும், இவர்களை சாவின் விளிம்பில் இருந்து காப்பாற்ற வேண்டியது உலக நாடுகளின் கடமை எனவும் ஐக்கிய நாடுகள் உணவுத்திட்

55 இலட்சம் பேருக்கு உடனடியாகவே உணவு தேவைப்படுவதால், அவசரமாக தமது உதவிகளை வழங்குமாறும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

பெறுமதியான ரிக்கற்றுகள் 10இலட்சம் டொலர் வரை போயிருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

இதன்மூலம் சேரும் நிதி ஜனாதிபதியின் மனைவியின் செனட்

விருந்து முடிந்தபின் பில் கிளிங்டனும் மனைவியும் ஜனநாயகக்கட்சி மகாநாட்டில் கலந்து உரையாற்ற இருக்கிறார்களென்றும் தெரிவிக்கப்படுகிறது. [து]

### சந்தனமரக்கடத்தல்

# வீரப்பனை சந்திப்பதற்காக நக்கீரன் 'ஆசிரியர் புறப்படுவார்

## தமிழக முதல்வர் தகவல்

(புதுடில்லி)

கன்னட நடிகர் ராஜ்குமார் மற்றும் மூவரின் விடுதலை தொடர்பான தமிழக கர்நாடகஅரசுகளின் தகவல்களுடன் நக்கீரன் ஆசிரியர் கோபால் வரும் வியாழக்கிழமை மீண்டும் காடுசென்று வீரப்பனைச் சந்திப்பார் என தமிழக முதல்வர் கருணாநிதி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

அண்மையில், கோபால் மூலம் வீரப்பனால் விடுக்கப்பட்ட 5 கோரிக்கைகளில் பெரும் பாலானவற்றிற்கு இணலும் வீரப்பனிற்கு இ

சாதகமான முடிவுகள் எடுக்கப்படாத போதிலும் கோபாலின் இம்முறை தூதுப்பயணம் வெற்றிகரமாக அமையும்என பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

வீரப்பனின் முக்கியகோரிக்கையான தமிழகச் சிறையில் உள்ள தமது சகாக்களான ஐவர் விடுதலை மற்றும், 51 பொது மக்களின் விடுதலை தொடர்பாக 'தமிழக கர்நாடக முதலமைச்சர்கள் கொண்டுள்ள நிலைப்பாடே நடிகர் ராஜ்குமார் விடுதலை தொடர்பான நம்பிக்கையைப் பலப்படுத்தியிருப்பதாய் ஊடகவியலாளர்கள் ஊகம் வெளியிட்டுள்ளனர். [உ]

## பலஸ்தீன அதிபர் சீனா பயணம்

பலஸ்தீன அதிபர் ஜசீர் அரபாத் அரசமுறைப் பயணமாக காசாவைவிட்டுப் பீஜிங்குக்குப் பயணமானார்.

பயணத்தின் போது சீன அரசுத் தலைவர் ஜியாஸ்சிமின் மற்றும் இதர சீனத் தலைவர்களையும் சந்தித்து உரையாடுவார்.

இந்த உரையாடலில் காம்டேவிட் முத்தரப்பும் பேச்சுவார்த்தைகள் பற்றி எடுத்துரைப்பார். (து)

## இனம் தெரியாதோர் தாக்குதலில் படையினர் இருவர் பலி

### பாகிஸ்தானில் சம்பவம்

[இஸ்லாமபாத்]

பாகிஸ்தானில்பஞ்சாப் மாநிலத்தில், சோதனைச்சாவடியில் நின்ற பாதுகாப்புப்படையினர் இருவரை மோட்டார் சைக்கிளில் வந்த இனம்தெரியாத துப்பாக்கி நபர்கள் சுட்டுக்கொன்றுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் சென்ற நபர்களை, காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மறித்து சோதனையிட முயன்றபோதுமேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் மேலும் இரு பொலிஸார் சூட்டுக் காயங்களுக்கு இலக்காகியுள்ளனர்.

இதேசமயம்,

மேற்படி கொலை நபர்கள் வேறு குற்றச்செயல்களுக்கு சென்றிருக்கலாம் எனவும், சோதனையிடமுயன்ற போது தம்மை பொலிஸார் இனம் கண்டு விடுவர் எனும் அச்சம் காரணமாகவே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருக்கலாம் எனவும் கருதப்படுகிறது. (உ)

## பிரச்சினை தீர்ந்தால் உறவுவரும்

(டோகா)

காஷ்மீர் பிரச்சினை தீர்ந்துவிட்டால் புதுடில்லியுடனான உறவு முறை இயல்பு நிலைக்கு வந்து விடும் என்று கட்டார் டோகாவில் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் அப்துல் சட்டர் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியில்தெரிவித்துள்ளார்;

எண்ணிய எண்ணியாங்கு
எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்
-குறள்

# வலம்புரி

## பல்லவிகள் பலவிதம்

பன்னிரண்டாவது பிரதமர் தமது கன்னிப் பேச்சில் உதிர்த்த கசப்பான வார்த்தை என்னவெனில் தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இருக்குமாயின் என்பதாகும். வாழ்க்கையின் ஓரத்தில் வாடி வதங்கி உரிமைப்போராட்டத்தில் கருகிக் கிடக்கும் தமிழர்களுக்கு பிரச்சினை இல்லை என்பது பொருளா? அல்லது ஆய்வு ஒன்றினை நடத்திப் பிரச்சினையைக் கண்டு பிடிக்கும் முயற்சியா? கேவலம் காலம் கடத்தும் அரசியல் நடத்திக் கொண்டு சொகுசு வாழ்க்கை நடத்துபவர்களை இம்மியும் நம்பலாமா? என்று எண்ணத் தோன்றுகிறது. பாவம் அறளை பேர்ந்த நிலை என்று மன்னிப்பளிக்கலாமோவென்றால் வயது அவ்வளவுக்கு ஏறவில்லை. இந்தப் பூனை கண்ணை மூடப் பார்க்கிறது, பூலோகம் இருண்டு விடும் என்ற நினைப்பு.

இன்றைய தமிழர்களின் பிரச்சினைக்கு முக்கிய காரணங்கள் இரட்டை நாக்கு அரசியல்வாதிகளே. காலத்துக்கு காலம் இடம் வலம் போட்ட இருட்டடிப்பாளர்களே என்பதைமறந்து பிரதான பிரச்சினைபயங்கர வாதம் என்றுகூறுவது நெஞ்சுக்கு நீதியாகுமா?

நோஞ்சான் அரசியல்வாதிகள் கொடுக்குக் கட்டிக் கொண்டு பிரச்சினை தீர்க்க எழும்புவதும் பேரினவாதிகளின் எதிர்ப்பைக்கண்டு பின் வாங்கி ஒழிவதும் காண கம்பன் கண்டதேவர்கள் முத்தின் ஆரமும், முடியின் மாலையும் இரிய இரிய ஓடிய காட்சிதான் மனக் கண் முன் வரும்.

ஆற்றாமை கொண்ட அரசியல் தலைகள் தமிழருக்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்ற வாய்ப்பாட்டைக் கொண்டவர்கள் தான். ஜே. ஆர் ஒரு தடவை பிரச்சினை உண்டு என்று வாய்மலர்ந்தார். அதைத்தொடர்ந்து வந்த சந்திரிக்கா அம்மையாரும் அதே இராகத்தைப் பாடினார். ஆனால் நடந்ததென்ன? அயர்ந்து போய்க்கிடந்த பேரினவாதிகள் கொடுக்குக் கட்டிக் கொண்டு வீதிக்கு வந்து விட்டார்கள். நாங்கள் எங்கே கடலில் குதிப்பதா என்று முகாரிபாடுகிறார்கள். அப்படியானால் கரவன் வாழ்க்கைவாழும் தமிழர்கள் என்ன செய்வது ஆண்டான் அடிமையாய் காலம் காலமாகக் கண்ணீர் வடிப்பதா?

இம் என்றால் சிறைவசமா? ஏன் என்றால்வன வாசமா? நிமிடத்துக் நிமிடம் நிலையில்லாத, நிம்மதியில்லாத வாழ்வு வாழ்ந்து தொலைப்பதா? மதவாதிகளும் பேரினவாதத்தலைகளும் எங்கள் மத்தியில் மணிக்கணக்கில் வாழ்ந்து பார்க்கட்டும். நிலமை புரியும்.

அன்புடன் ஆசிரியர்

# விலங்கு விசர் நோய் (Rabies)

# வீண் உயிரிழப்புகளை தவிர்ப்பது எவ்வாறு?

**நிகழ்வு: 1**

47 வயதுடைய ஒருவர் தனது மகன் வளர்ப்பு நாயினால் கடியுண்டதால் கோபமுற்று நாயை கையால் அடித்தார். அடித்தபோது இவரது கையிலும் சிறு சிராய்ப்பு ஏற்பட்டது. கடித்த நாய் பத்து நாட்களுக்குள் இறந்துவிட்டது. பிள்ளைக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டது. எனினும் தமக்கு ஏற்பட்ட சிறுசிராய்ப்பு நோய்த் தொற்றை ஏற்படுத்த போதுமானது என கருதாததால் தமக்கு விலங்கு விசர்நாய்த் தடுப்பூசி (ARV) போடத் தவறினார். விளைவு 2 மாதத்தின் பின் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மரணத்தை தழுவிக்கொண்டார்.

**விலங்கு விசர்நோய் அல்லது நீர்வெறுப்பு நோய்**

இந் நோயானது றேபீஸ் (Radles) எனப்படும் வைரசினால் உண்டாகும் நோயாகும். இது மைய நரம்பு தொகுதியை தாக்குகின்றது.

**நோய் தொற்றுகை**

விலங்கு விசர் நோய்க்குள்ளான நாய், பூனை, நரி, வௌவால் போன்ற விலங்குகள் மனிதனை கடிப்பதன் மூலமாகவே பெரும்பாலும் நோய் தொற்றுகை ஏற்படுகின்றது. யாழ்குடாநாட்டைப் பொறுத்தவரை பெரும்பாலான தொற்றுகைகள் நாய் மூலமாகவே ஏற்படுகின்றது.

நோயுற்ற விலங்கின் உமிழ்நீர் எமது உடலில் காணப்படும் காயங்களில், இவ்வாறு காயத்தை அடைந்த வைரஸ் அங்கு பிரிந்து பெருகி, நரம்புகளினூடாக மூளையைச் சென்றடைகின்றது. அங்கு அவை தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் நோய்க் குறிகள் ஆரம்பமாகி இறுதியில் தவிர்க்க முடியாத மரணம் சம்பவிக்கின்றது.

நோய்க்குறி தோன்ற பொதுவாக 9 — 90 நாட்களாகும். சில வேளைகளில் ஒரு வருடம் வரை செல்லலாம். இக்காலம் பல காரணிகளில் தங்கியுள்ளது. இதில் பிரதானமாக கருதப்படுவது கடிகாயத்துக்கும் மூளைக்குமான தூரம் ஆகும்.

[முகத்தில் ஏற்படுத்தப்படும் காயம் மூலம் வைரஸ் விரைவாக மூளையை சென்றடையும். ஆனால் அதே மாதிரியான காயம் காலில் ஏற்படுமிடத்து வைரஸ் மூளையை அடைய எடுக்கும் காலம் அதிகமாகும்.]

இதைத்தவிர காயத்தின் பரிமாணம், கடிகாயத்துக்கு செய்யும் முதலுதவி, விலங்கின் உமிழ்நீரில் உள்ள வைரசின் அளவும் தன்மையும் என்பனவும் இக்கால வேறுபாட்டில் பங்களிப்பு செய்கின்றன.

## மருத்துவ விளக்கம்

தொடுகையடைவதனாலும் நோய்த் தொற்று ஏற்படுகின்றது. இதைத்தவிர விழி வெண்படல மாற்று சிகிச்சை மூலமும் நோயுற்ற மனிதனிலிருந்து இன்னொருவரிற்கு நோய் தொற்று ஏற்பட்டதற்கான ஆதாரங்கள் உண்டு.

**நோயின் குணங் குறிகள்**

★ முதலில் சாதாரண குணங்குறிகளுடன் ஆரம்பிக்கும். அதாவது மெலிதான காய்ச்சல், தலையிடி, சோர்வு, தொண்டைநோ, கடித்த இடத்தில் சொறிவு, ஆரம்பித்து 2 — 5 நாட்களுள் மரணம் சம்பவிக்கும்.

**முதலுதவி-சிகிச்சை முறை**

★ நோயுற்ற நாய் கடிக்கும்போது அதன் உமிழ்நீரிலுள்ள கிருமிகள் காயத்தில் விடப்படுகின்றன. எனவே காயத்தை உடனடியாக சவர்க்காரம் கொண்டு ஓடும் நீரால் 5 நிமிடங்களிற்கு குறையாமல் கழுவுதல் சிறந்த பயனைத் தரும். இதன்போது பெருமளவு வைரஸ் அழிக்கப்பட்டுவிடும். பின் முடிந்தால் செறிந்த மதுசாரம் கொண்டு காயத்தை கழுவலாம்.

★ கழுவியபின் காயத்தில் அதிகளவு இரத்தப் பெருக்கு இருப்பின் காயத்தை சுத்தமான துணியால் நன்றாக சுற்றிக் கட்டுவதன் மூலம் இரத்தப் பெருக்கு குறையும். பின் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லல் வேண்டும். இங்கு சிலர் செய்யும் தவறு யாதெனில் காயத்தை கழுவி சுத்தம் செய்யாது துணியால் சுற்றி கட்டுதலாகும். இது காயத்தில் உள்ள வைரஸ் பெருகி உடலுள் புகும் தன்மையை மேலும் ஊக்குவிக்கும்.

★ கடித்த நாயை பத்து நாட்களுக்கு சங்கிலியால் கட்டி வைத்து அவதானித்து நாய் இறந்தால் அல்லது வித்தியாசமான குணாதிசயங்கள் கொண்டிருந்தால் வைத்தியரிடம் அறிவிக்க வேண்டும்.

வைத்தியசாலையில் காயத்துக்கு சிகிச்சை மேற்கொள்ளப்படுவதுடன் காயத்தினூடாக பக்டீரியா தொற்றல் மூலம் ஏர்ப்புவலி நோய் ஏற்படாமல் இருக்க ஏர்ப்பு வலி தடையூசி போடப்படும். இது பொதுவாக கம்பி குற்றல், தகரம் வெட்டல், கண்ணாடித் துண்டு வெட்டல் போன்றவற்றால் ஏற்படும் காயங்களிற்கும் போடப்படும் ஊசியாகும்.

இதை விலங்கு விசர்நாய்க் கடி தடைமருந்து (ARV) என எண்ணிவிடக் கூடாது.

(தொடரும்)

★ சி. சுரேஷ் ★ ச. சிவகாந்தன்
4ஆம் வருட மருத்துவபீட மாணவர்கள்

வழமைக்கு மாறான நடவடிக்கைகள்:

★ தொடர்ந்து உடல் முழுவதுமுள்ள நரம்புத் தொகுதி (புலன், இயக்க, தன்னாட்சி) தூண்டப்பட்ட நிலையை அடையும். அதனால் இந் நோயாளிகளினால் சத்தம், வெளிச்சம், குளிரான காற்றின் தொடுகை போன்றவற்றை சகித்துக்கொள்ள முடியாமல் போகும்.

★ பின்னைய நிலையில் தசைப்பிடிப்பு அதிகமான நிலையை அடையும். தொண்டைத் தசைகள் இறுகிக்கொள்வதால் மூச்சுவிட கடினமான நிலை ஏற்படும். இவர்கள் தண்ணீரைக் கண்டாலோ அல்லது அதன் ஒலியைக் கேட்டாலோ தசைப்பிடிப்பு மேலும் அதிகமாகும். அதனால் நீர்வெறுப்பு ஏற்படும்.

★ நோயின் குணங் குறிகள்

**நிகழ்வு: 2**

5 வயது சிறுவன் அண்மையில் இடம்பெயர்ந்து வேறு வீட்டில் தங்கியிருக்கையில் அவ் வீட்டு நாயால் கடிக்கப்பட்டான். உடனடியாக அந்த நாயை சங்கிலியால் கட்டிப் போட்டனர். எனினும் நாய் வழமைபோல் தண்ணீர் அருந்தியது. எனவே அதற்கு விலங்கு விசர்நோய் இல்லை எனக் கருதி மூன்றாம் நாள் நாயை அவிழ்த்துவிட்டனர். அதன் பின் நாய் காணாமல் போய்விட்டது. சிறுவனிற்கு விலங்கு விசர் தடுப்பூசி (ARV) ஏற்ற தவறினர். சிறுவன் ஒரு மாதத்தின் பின் விலங்கு விசர் நோய்க்குள்ளாகி மரணமடைந்தான்.

தமிழ் மக்களது அடிப்படை தேவைகள்

# நிறைவேற்றப்படாமையே புலிகளின் இன்றைய நிலைக்கு காரணம்

## சிறிசேனகூரே தெரிவிப்பு

(ஏறாவூர்)

தமிழ் மக்களது அடிப்படைத்தேவைகள் நிறைவேற்றப்படாமையே, விடுதலைப்புலிகளின் இன்றைய நிலைப்பாட்டிற்குக் காரணமாகும்

மாகாண எல்லைகளை மாற்றி அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்குமாறு ஒரு சாரார் கேட்கிறார்கள். இதனை ஏற்க சிங்களமக்கள் மறுக்கிறார்கள் தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் இருப்பதனாலேயே வடக்கு கிழக்கு இணைப்பு கோரப்படுகிறது என நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்த பிரஜைகள் முன்னணி தேசிய அமைப்பாளர் சிறிசேனகூரே தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறுகையில்; இந்த நாட்டின் இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டுமானால் தீர்வுத் திட்டம் சிறுபான்மை மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதேசமயம் பெரும்பான்மை இனத்தவரும் திருப்திப்பட வேண்டும்.

13 வது திருத்தச் சட்டத்தின் கீழ் வடக்குக் கிழக்கில் தனித்தனியான மாகாண சபைகள் அமைக்கப்பட்டு பாராளுமன்ற மேற்சபையினூடாக இரு மாகாணங்களும் இணைந்து செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதன் மூலம் மாகாண இணைப்பு தொடர்பான பிரச்சினைக்கு தீர்வுகாணலாம். இதற்கு மூன்றில் இரண்டுபங்கு ஆதரவோ மக்கள் கருத்துக்கணிப்போ தேவையில்லை என்றார்.

இக்கூட்டத்தில், மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் கலந்து கொண்டனர்.

(உ-108)

## முஸ்லிம் காங்கிரஸ் இன்றுகூடும்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், பொதுஜன, ஐக்கிய முன்னணி உறவுகள் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைமையில் கூடுகிறது.

இக்கூட்டத்தில் பொது நாடு முழுவதிலும் உள்ள 300 அங்கத்தவர்களைக் கொண்டு ஆலோசனைகள் நடாத்தப்படும் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் பொதுதேர்தலில் வடகிழக்கு மாகாணத்தில் பொது ஜனஐக்கிய முன்னணியுடன் இணைந்து முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட உள்ளதாகத் தெரியவருகின்றது

[கு-60]

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறைப் படிப்பகம்



## சுதந்திரக் கட்சியின் தலைவராக சந்திரிகா நியமிக்கப்படுவார்

[கொழும்பு]

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் செயற்குழு நாளைபுதன் கிழமை காலை 10மணிக்கு அலரிமாளிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் வெற்றிடமாகவுள்ள சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைவர் பதவிக்கு ஜனாதிபதி சந்திரிகா நியமிக்கப்படவுள்ளார்.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா பிரதமர் பதவியில் இருந்து இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து சந்திரிகா குமாரதுங்கா தலைவராக நியமிக்கப்படவுள்ளார்.

இதேவேளை கட்சியின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா காலமானதினால் அந்த இடத்திற்கு விளையாட்டுத்துறை அமைச்சர் எஸ்.பி. திசநாயக்கா அல்லது மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபாலசிறிசேன நியமிக்கப்படலாம் என்றும் கட்சியின் உபதலைவராக சிறிமாவோ பண்டாரநாயக்கா நியமிக்கப்படலாம் என்றும் அமைச்சர் அலவிமௌலானா 'வலம்புரி'க்குத் தெரிவித்துள்ளார்.

இச்செயற்குழுக் கூட்டத்தில் பாராளுமன்றத்தை எப்போது கலைக்கலாம் என்றும் ஆராய்ந்து முடிவெடுக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. [வ]

## யாழ் செயலகத்தில் 18ஆம், 19ஆம் திகதிகளில் மக்கள் குறைகேள் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

பொது மக்களின் குறைகளையும், தேவைகளையும் நிவர்த்திக்கும்நோக்குடன்மக்கள்குறை கேள் செயலமர்வு யாழ் அரசசெயலகத்தில்எதிர் வரும் 18ம் திகதி வெள்ளிக்கிழமையும் 19ம் திகதி சனிக்கிழமையும் நடைபெறுவதற்குரிய ஏற்பாடுகளை யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் ஈ.பி.டி.பியின் யாழ்மாவட்டபாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ்வேனந்தாவின் ஒழுங்கமைப்பின்கீழ்யாழ்அரச அதிபர் கே. சண்முகநாதன் மேற்கொண்டுள்ளார்.

இச் செயலமர்வில் வடக்குக் கிழக்கு மாகாண சபைச் செயலாளர்கள், திணைக்கள உயரதிகாரிகள் மத்திய அரசிற்குட்பட்ட திணைக்கள, கூட்டுத்தாபன, நியதிச் சபைகள், வங்கிகள் ஆகியவற்றின் உயரதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இச் செயலமர்வில் பொது மக்கள் தங்களின் குறைகள், தேவைகள் பற்றி வெளிப்படுத்த முடியும் எனவும் ஒவ்வொரு துறைரீதியாகஎழுத்து மூலம் குறைபாடுகளையும், தேவைகளையும் சுட்டிக் காட்டி உரிய நடவடிக்கை எடுப்பதற்கு உதவும் வகையில் பொது மக்களையும் இச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு அரச அதிபர் கே. சண்முகநாதன் கேட்டுள்ளார்.

இதேவேளை இச்செயலமர்வினால் ஏற்படக்கூடிய பெறுபேறுகளை மக்கள் பிரதிநிதிகள் உன்னிப்பாக அவதானிப்பர் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

### யாழ். மாவட்ட...

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான வீ. ஆனந்தசங்கரி, மாவை சேனாதிராசா, யாழ். மாநகரசபை பிரதி மேஜர் ரவிராஜ், மாநகர சபை உறுப்பினர்களான அரவிந்தன், முகுந்தன், ஆகியோரும் யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் உடுப்பிட்டியில்— அரவிந்தன் (யாழ் மாநகர சபை உறுப்பினர்) நல்லூர்— வீ. ஆனந்தசங்கரி [உப தலைவர் தமிழர் விடுதலைக் கூட்டணி] கோப்பாய்— காரைசுந்தரம்பிள்ளை [இளைப்பாறிய கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர்] யாழ்ப்பாணம்— பிலிப்சேவியர் [முன்னாள் உதவி மேஜர்] சாவகச்சேரி— ரவிராஜ் (பிரதி மேஜர் யாழ் மாநகர சபை) மானிப்பாய்— ஆ. மகாலிங்கம் [உடுவில் பிரதேச செயலர்] காங்கேசன்துறை— மாவை சேனாதிராசா [தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உறுப்பினர்] ஆகியோர் தேர்தல் களத்தில் குதிக்கவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன அதேவேளை அபேட்சகர்கள் தெரிவில் மாற்றங்கள் ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

### பொதுஜன

வரதராஜப் பெருமாளை பொதுசன ஐக்கிய முன்னணியின் பட்டியலில் போட்டியிட வைப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருவதாகவும் தெரியவருகிறது. (ந)

### தீக்காயங்கள்...

சாலையில் நேற்று இரவு 11-50 மணிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் இளம்பெண் சுதுமலை சாவற்கட்டைச் சேர்ந்த த. சுதாதேவி என தெரிவிக்கப்படுகிறது. [ல-105]

### நான்கு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி ரெலோ அமைப்பின் தலைவர் சட்டத்தரணி எம்.சிறிகாந்த, ''புளொட்'' அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகிய தலைவர்களே யாழ்ப்பாணத்தின் தலைமை வேட்பாளர்களாகப் போட்டியிடவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத் தேர்தல் களத்தில் குதிக்கவுள்ள அரசியல் கட்சிகள் எல்லாம் தனித்தே இத் தேர்தலில் போட்டியிடவுள்ளன. அம்பாறையில் மட்டும் தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தவிர ஏனைய தமிழ்க் கட்சிகள் கூட்டுசேர்ந்து போட்டியிடவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

### சிங்கள ...

ஒன்றை நடத்தவுள்ளனர்.

சிங்கள இனவாதக் கட்சிகளான, சிங்கள பூமிபுத்திர கட்சி, வீரவிதான இயக்கம், சிங்கள உறுமய ஆகியவையே ஐக்கிய தேசிக்கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளதாகத் தெரிவிப்படுகிறது.

எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தலை மையமாக வைத்தே இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை ஐக்கியதேசியக் கட்சியும் சிங்கள இனவாதக் கட்சிகளும் நடத்துவது குறிப்பிடத்தக்கதாகும். (வ)

### பிரதமர்...

ஏற்படுத்தும் என தெரிவித்துள்ளார்.

ரெலோ அமைப்பைச் சேர்ந்த செல்வம் அடைக்கலநாதன் கருத்து வெளியிடுகையில் பிரதமரின் கூற்று தமிழ் மக்களை அடக்கி ஒடுக்கும் செயல் என்று கூறியுள்ளார்.

கூட்டணியைச் சேர்ந்த ஜோசப் பரராசசிங்கம் கருத்து வெளியிடுகையில் அரசாங்கம் தமிழ்மக்கள் மீது அரசியல் அமைப்பை திணிக்க முற்படுவதாகவும் இதனால் தமிழ் மக்களுக்குப் பிரயோசனமும் இல்லை என்று கூறியுள்ளார். (வ)

### குமார்...

மறைந்து ஏழு மாதங்களாகிவிட்டது இந்த ஏழுமாதங்களிலும் தமிழ் மக்களின் அவலம் நிறைந்த அப்பட்டமான வாழ்வு பற்றி குரல் ஒலிக்க

## தீவகத்தைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை வேலணையில்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, வேலணை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்டவர்களுக்கு சமுர்த்தி சார்ந்த பதவிகளுக்காக நடத்தப்படும் நேர்முகப் பரீட்சையாவும் வேலணை பிரதேச செயலர் பிரிவில் நாளை நடைபெறுமென ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினர் என். மதனராஜா அறிவித்துள்ளார். [ந]

## மடுத்திருப்பதிக்கு 20ஆயிரம் பக்தர்கள் பயணத்தின்போது பொலிஸ் கெடுபிடி

(வவுனியா]

மடு தேவாலய உற்சவத்திற்கு இம்முறை நாட்டின் சகல பகுதிகளிலும் இருந்து சுமார் 20 ஆயிரம் பக்தர்கள் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் இருந்து பக்தர்கள் மடுவுக்குச் செல்ல வசதியாக வவுனியா மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து சேவையினர் 20 பஸ்களை சேவையில் ஈடுபடுத்தியுள்ளதாக வவுனியா மேலதிக அரச அதிபர் சி. இரகுநாதபிள்ளை அறிவித்துள்ளார்.

மடு செல்லும் பக்தர்கள் தமது பொலிஸ் வதிவிட அனுமதிப் பத்திரத்தை பொலிசாரிடம் கையளித்துவிட்டுமடு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது அவர்களுக்கும் பெரும் சிரமத்தை அளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுறது.

மடு திருப்பதியின் இறுதி நாள்விழாவான இன்று மன்னார், யாழ்ப்பாணம் காவி மாவட்ட ஆயர்மள் கூட்டுத் திருப்பலி பூசை வழிபாடுகளை நடத்துவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இன்று செவ்வாய்க்கிழமை வவுனியாவில் இருந்து வன்னிக்கு பயணிகள் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் வன்னியில் இருந்து மடுவிற்கு சென்றவர்கள் மட்டுமே வவுனியாவிற்கு திரும்பி வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

ஸ்ரீ செல்வா

[யாழ்ப்பாணம்]

விஜயகாந், குஷ்பு, ராதாரவி நடித்த

சிம்மாசனம்

CD பிரதி (புதியவெளியீடு)

காட்சி நேரம்

10-30, 2-00 (ப.நே)

[இ 688]

பாராட்டி வாழ்த்துகின்றோம்

மாணவ மணிகளே!

"வலம்புரியில்"

விட்டது இந்த ஏழுமாதங்களி லும் தமிழ் மக்களின் அவலம் நிறைந்த அப்பட்டமான வாழ்வு பற்றி குரல் ஒலிக்க வில்லை ஒரு நாட்டின் ஜன நாயகத்திற்கு எண்ணத் துணிவு அவசியமாகும்.

ஜனநாயகம் என்பது மாறு படும் கருத்துகளுக்கிடையே ஒருமைப்பாட்டை காண்பதே அன்றி ஒருவர் கருத்தை ஒரு வர் மீது திணிப்பது அல்ல அதற்கு இணக்க உணர்வும் துணிவும் அவசியம் என்றும் அவர் மேலும் கூறினார்.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஊர்காவற்றுறை பிரதேசசபைத் தலைவராக இருந்தவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்டப் பிரதி அமைப்பாளரும், தீவக அமைப்பாளரும், செயல் வீரருமாகிய தீவகத்தின் மைந்தன் கௌரவ நடராஜா மதனராஜா அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட் டுள்ளதை யிட்டு இதயபூர்வமான வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்,

தீவுப்பகுதி தெற்கு பிரதேச சனசமூக
நிலையங்களின் சமாசம்
வங்களாவடி, வேலணை.

(கி-717)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் தலைவராக இருந்தவரும் ஈழ மக்கள் ஜனநாயகச் கட்சியின் யாழ் மாவட்ட பிரதி அமைப்பாளரும், தீவக அமைப் பாளரும் செயல் வீரருமாகிய தீவகத்தின் மைந்தன் கௌரவ நடராசா மதனராஜா அவர்கள் நாடாளு மன்ற உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதை யிட்டு இதயபூர்வமான வாழ்த்துக்களையும் பராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்,

பயிற்றப்படாத ஆசிரியர் சங்கம்
யாழ்ப்பாணம்.

(கி-716)

# கஜன்

திரை
ஊர்காவற்றுறை
ரஜனி, ஸ்ரீதேவி
ராதாரவி நடித்த

# நான் அடிமைஇல்லை

காட்சி நேரம்
பி.ப 3.30 மணி

(கி/652)

## மாணவ மணிகளே!

"வலம்புரியில்"

க. பொ. த (சாதாரண)
மாணவர்களுக்கான முன்மாதிரி
வினா விடைகள்
(அனைத்துப் பாடங்களுக்கும்)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனங்களில் கடமையாற்றும் சக ஊழியர் ஆறுமுகம் ஈஸ்வரகுமாரின் (ஈசன்) அன்புச் சகோதரன்

### ஆறுமுகம் நிர்மலகுமார்

காலமானதையிட்டு அன்னாரின் துயரில் ஆழ்ந்திருக் கும் குடும்பத்தார்க்கு எமது நிறுவனங்களின் சார் பில் கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்கின்றோம்.

உரிமையாளர்களும்,
ஊழியர்களும்,

இ. ச. பேரம்பலம் சக நிறுவனம்
50, 52, 54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கஜமுகன் ஹாட் வெயர்
147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[கி/715]



இப்பத்திரிகை "வலம்புரி" [illegible] இல: 15, [illegible] யாழ்ப்பாணம் [illegible] 2000 ஆம் ஆண்டு [illegible] மாதம் 15 ஆம் திகதி [illegible]